# யா / கொழும்புத்துறை
# துரையப்பா வித்தியாலயம்

# பரிசுத் தினம் - 2016




## பரிசுத்தின மலர்

J/COLOMBUTHURAI THURAIYAPPAH VIDYALAYAM
JAFFNA

20.06.2016

# J/Colombuthurai Thuraiyappah Vidyalayam
# Jaffna

Prize day 2016
20th June 2016 at 9.00 A.M

Chairperson
Mr.Nadesu Thayalan M.Ed., M.A.,PGDEM (Merit)

**Chief Guest**
**Mr.Suppiah Shanmugakumar *B.A., Dip.in.Ed .,M.Ed ,. SLPS - I***
**Divisional Education officer**
**Jaffna Division**

## நோக்கு (Vision)

சமூக வளர்ச்சிக்குப் பொருத்தமான தேர்ச்சிகளை வழங்கும் உன்னத பாடசாலையாக மிளிர்தல்

## பணிச்செயலொழுங்கு (Mission)

1. எதிர்கால சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய திறன்களை அடையச் செய்தல்
2. தனது தனித்துவத்தினையும் அடையாளத்தினையும் பேணிய வகையில் சமூக உறுப்பினராக இயங்கச் செய்தல்
3. கல்வி அடைவின் மூலமான சமூக அசைவுக்குப் பங்காற்றும் பிரசையாக்கல்

## மகுட வாசகம் (Motto)

"கற்றனைத்தூறுமறிவு"

## நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர் வரவேற்பு
- கொடியேற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புப் பாடல்
- வரவேற்புரை
- அதிபர் அறிக்கை
- பேச்சு – தமிழ்
- பிரதமவிருந்தினர் உரை
- ஆங்கிலப் பேச்சு
- பரிசில் வழங்குதல்
- கலைநிகழ்வுகள்
- நடனம்
- கூத்து
- நன்றியுரை
- பாடசாலைக் கீதம்

# வரவேற்புப் பா

விருந்தினரை வரவேற்றல் தமிழர் தம் பண்பாடு
அருகிருந்து இசைபாடி கரங்கூப்பி வரவேற்போம்
நற்தமிழால் ஆசிகூறி கௌரவிக்கும் பரிசில் நாளில்
நாட்டமுடன் வந்திருக்கும் விருந்தினர்கள் வருகவே!

முத்தமிழில் சிறந்த இணுவையூர் பெற்றெடுத்த
வித்தியா விஜயஸ்ரீ விருதும் பெற்றுயர்ந்த
கல்வி முதுமாணியாய் கல்விப்புலம் சிறக்க
நல்ல பணியாற்றுகின்ற நம் முதன்மை விருந்தினரே!
கோட்டக்கல்வி அதிகாரி சண்முககுமார் அவரை
பாங்குடன் வரவேற்போம் வருக வருகவே......!

இராமநாதன கல்லூரி ஆசிரியையாம் அருள்மதி
கோட்டக்கல்வி அதிகாரி சண்முககுமார் துணைவியார்
ஓய்வில்லாது மாணவரை ஊக்குவிக்கும் உத்தமி
ஒப்பரிய பரிசில் பல வழங்கிட வருக வருகவே...!

கல்வியதிகாரிகளே எம்மினிய பெற்றோரே
கலைக்கூடத் தூண்களாம் பழைய மாணவரே
நற்றமிழால் இசைபாடி யாவரையும் வரவேற்று
வருக வருகவென வரவேற்கின்றோம்.....!

# அதிபர் அறிக்கை 2016

எமதருகில் வீற்றிருந்து எமக்கு அருள் பாலிக்கின்ற எல்லாம் வல்ல சந்திரசேகர விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களை வணங்கிக் கொண்டு.......இவ்விழாவுக்கு வருகைதந்துள்ள பிரதமவிருந்தினர் அவர்களே, கல்விசார் உத்தியோகஸ்தர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எனது இனிய காலை வணக்கங்கள்.

இன்றைய நாள் எம் அனைவருக்கும் பொன்னான நாள். எமது எதிர்காலச் சமூகத்துக்கு பங்காற்றக் கூடிய வகையில் வளர்த்தெடுக்கப்படும் மாணவச் செல்வங்களை பாராட்டி வாழ்த்தும் இனிய நாளாகும். அது மட்டுமல்ல அவர்களது உயர்வுகண்டு நாமும் உவகையுறும் இன்பமான நாளுமாகும்.

சக்தி மிகு பாடசாலையொன்றின் வளர்ச்சியில் உன்னதாமான பங்குபற்றுதல்களும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் அவசியமாயுள்ள இவ்வேளையில் சமூகத்துக்கான உன்னத பாடசாலையினை உருவாக்குவதில் நாம் அனைவரும் அர்ப்பணிப்புடனும் தூர நோக்குச் சிந்தனையுடனும் இணைந்து கொள்வோம் என அழைப்பதுடன் இப் பரிசுத்தின விழாவுக்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் பாடசாலைச் சமூகஞ்சார்பில் வருக வருக என வரவேற்பதில் மகிழ்வடைவதோடு 2016.06.19 வரையான காலப்பகுதிக்கான அதிபர் அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய பரிசளிப்பு நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பிக்கின்ற யாழ்ப்பாணக் கல்விக் கோட்டக் கல்விப்பணிப்பாளரும் எமது பாடசாலையோடு மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளவருமான திரு.சுப்பையா சண்முககுமார் அவர்களே எமது பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து எம்மை மகிழ்விக்கும் தங்களையும் தங்கள் துணைவியாரையும் பாடசாலைச் சமூகஞ்சார்பில் வருக வருக என வரவேற்கின்றேன். யாழ்ப்பாணத்தில் கல்வியும் கலையும் தழைத்தோங்கும் இணுவில் கிராமத்தில் பிறந்த தாங்கள், தங்களது ஆரம்பக் கல்வியை இணுவில் மத்திய கல்லூரியிலும் இடைநிலை உயர்தரக் கல்வியினை யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்று நல்லதோர் சமூகப் பிரஜையாக சமூகத்தில் இணைந்த வேளையில் 1979 ஆம் ஆண்டு மூதூர் பிரதேசத்தில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றீர்கள். இணைந்து கொண்ட தொழிலிலே வாண்மைநிலையினை எட்டுவதற்காக 1983/1984 ஆண்டுகாலப்பகுதியில் பலாலி ஆசிரிய கலாசாலையில் விஞ்ஞான ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றுக் கொண்ட தாங்கள் 1991 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகக் கலைப்பட்டதாரியாகவும் தங்களது தகுதி நிலையினை உயர்த்திக் கொண்டீர்கள். அதேயாண்டு நடாத்தப்பட்ட அதிபர் சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் பதவியினையும் பொறுப்பேற்றுக் கொண்டீர்கள். 1996/1997 காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப் பின் கல்வி டிப்ளோமாப் பட்டத்தினையும் 2001 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே முதன் முதலாக கல்வி முதுமாணிப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்ட போது அவ் முதலாவது அணியில் கல்வி கற்பதற்காகவும் தெரிவு செய்யப்பட்டீர்கள். அந்த முதலாவது அணி மாணவனாக பல்கலைக் கழகத்தில் கல்வி கற்பதற்கு அதிபராகிய நானும் தெரிவு செய்யப்பட்டிருந்தமை எமது நட்புக்குப் புதிய பரிமாணத்தினையும் ஏற்படுத்தியிருந்தது. அதிபர் சேவையில் சிறப்பான பணியாற்றியமைக்காக 2005, 2011 காலப் பகுதிகளில் சிறந்த அதிபர்களுக்கான விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டீர்கள். தங்களது அர்ப்பணிப்பு மிக்க சேவைக்கான வெகுமதியாக 2012 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவியும் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலையான எமது பாடசாலையுடன் தாங்கள் நெருக்கமான உறவினைப் பேணியமையும் நட்புடன் செயற்பட்டமையும் மட்டுமல்ல சிறப்பான முறையில் அரச சேவையினைமேற் கொண்டு சேவையில் இருந்து இளைப்பாறவுள்ள நிலையில் தங்களை கௌரவிக்க வேண்டும் என்ற எமது எண்ணத்தின் அடிப்படையில் தங்களை பிரதமவிருந்தினராக அழைத்து நாமும் பெருமையடைகின்றோம்.

இணுவில் கிராமத்தில் பிறந்து இணுவில் இந்துக்கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் இராமநாதன் கல்லூரியில் உயர் கல்வியையும் கற்று 1987 இல் ஆசிரிய நியமனம் பெற்று ஆரம்பக் கல்வி ஆசிரியர் பயிற்சியினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 1993/94 காலப்பகுதியில் பெற்று தற்போது இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் அதேவேளை தங்களது அனைத்துச் செயற்பாடுகளுக்கும் உற்ற துணையாக விளங்கும் தங்களது துணைவியார் அருள்மதி சண்முககுமார் அவர்களது வருகையும் எமக்குப் பேருவகை தருகின்றது. தங்கள் இருவரது கைகளாலும் பாராட்டுப் பெறவுள்ள எமது மாணவச் செல்வங்களும் உயர்நிலையடைவார்கள் என்பதும் எமது எதிர்பார்க்கையாகும்.

## செயற் சாதனைகள்

ஐம்பத்து இரண்டு ஆண்டுகள் கல்வி வரலாற்றினைக் கொண்ட எமது பாடசாலையானது தனது வளர்ச்சிப் போக்கில் காலத்துக்குக் காலம் கோட்டமட்ட வலயமட்ட பரிசில்களைப் பல்வேறு ஆற்றுகைகளுக்காகப் பெற்று வந்துள்ள போதிலும் கல்வி அமைச்சின் 2015 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளின் அதி சிறந்த செயற்பாட்டுக்கான தேசிய விருதினை எமது பாடசாலை பெற்றுக் கொண்டுள்ளமையானது பாடசாலை வளர்ச்சிப் போக்கிலோர் உன்னத நிலையினை எடுத்தியம்புவதாகவுள்ளது. மத்திய கல்வி அமைச்சின் தர உறுதிப்பாட்டு அலகினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுக்கமைய 2015 ஆம் ஆண்டுக்கான தேசிய ரீதியிலான இவ் விருதினை வடமாகாணத்தில் பெற்றுக் கொண்டுள்ள இரண்டு பாடசாலைகளில் ஒன்றாக எமது பாடசாலையும் விளங்குவது எமக்கும் பாடசாலைசார் சமூகத்துக்கும் பெருமை சேர்க்குமோர் விடயமாகவுள்ளது.

## பாடசாலையின் கல்வி அடைவு நிலை

பாடசாலையின் கல்வி அடைவு நிலையினைப் பொறுத்தவரையிலும் எமது பாடசாலையானது புதிய பாதையில் பயணிப்பதனை நாம் பெருமையுடன் கூறிக் கொள்வதில் மகிழ்வடைகின்றோம். கல்விக்கான சமூக உள்ளீடுகள் அதிகரித்துள்ள நிலையில் எமது கற்றல் கற்பித்தல் சார்பான செயற்பாடுகளின் விளைவாக வெளியீடுகளிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமையினை அறிய முடிகின்றது. வகை இரண்டுப் பாடசாலையான எமது பாடசாலையில் இருந்து உயர் கல்வி கற்பதற்காக வெளியேறும் மாணவர்களது தகுதி வீதமானது பின்வருமாறு அதிகரித்துச் சென்றுள்ளது.

2012 - 12%<br>
2013 - 25%<br>
2014 - 50%<br>
2015 - 55%

இது மட்டுமல்ல புலமைப் பரிசில் பரீட்சையிலும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களது சித்தி வீதமானது 81 % ஆகவுள்ளமையும் நோக்கத்தக்கது. இத்தகைய அபிவிருத்திக்குப் பங்காற்றிய ஆசிரியர்களையும் ஆசிரியர்களது வழிகாட்டலினால் சித்தியடைந்த மாணவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துகின்றேன்.

கல்வி அமைச்சரிடம் இருந்து பாடசாலையின் சிறந்த செயற்பாட்டுக்கான தேசிய விருதை அதிபர் பெற்றுக்கொண்ட போது



## ஆசிரியர் வளம்

### ஆசிரியர் ஆளணி விபரம்

| இல | ஆசிரியர் பெயர் | சேவைத் தரம் | கல்வித் தகைமை | தொழிற்தகை மை |
|---|---|---|---|---|
| 01. | திரு.நடேசு தயாளன் | SLPS - 2 | M.A | M.Ed, PGDEM |
| 02. | திருமதி.நாகராஜேஸ்வரி சுகிர்தலிங்கம் | SLTS - 1 | Dip. in Music | - |
| 03. | திரு.பாலசிங்கம் சண்முகானந்தன் | SLPS-III | B.Com | M.Ed |
| 04. | திருமதி. திருஞானவதி கணேஸ்வரன் (பகுதி நேரம்) | SLTS - I | B.A | Dip. in Ed. |
| 05. | திருமதி.கலாநிதி ஜெயராஜபாலா | SLTS - I | B.A | Dip. in Ed. |
| 06. | திருமதி.இவாஞ்சலின் ஞானப்பொன்ராஜா | SLTS - I | B.A- English | Dip. in Ed. |
| 07. | திருமதி.பாரதிதேவி சற்குணநாதன் | SLTS - I | G.C.E.A/L | Trd.in Science |
| 08. | திருமதி.இந்திராணி சூரியகுமார் | SLTS - I | G.C.E.A/L | Trd.in Primary |
| 09. | திருமதி.தேவராணி தேவகுமார் | SLTS - I | G.C.E.A/L | Trd.in Home Economics |
| 10. | திருமதி.சத்தியபாமா நாகேஸ்வரன் | SLTS – 2- I | G.C.E.A/L | Trd.in Hindusim |
| 11. | திரும்தி.விமலாதேவி புவனேஸ்வரகுமார் | SLTS – 2- I | G.C.E.A/L | Trd.in Primary |
| 12. | திருமதி.மதிவதனி இராஜேஸ்வரன் | SLTS – 2- I | B.Com- (Hons) | Dip. in Ed. |
| 13 | திருமதி.அ.டொ.விமலேஸ்வரன் | SLTS – 2- I | G.C.E.A/L | Trd.in Art |
| 14. | செல்வி.முத்துலிங்கம் கிருஷ்ணபாமினி | SLTS – 2- II | B.A | Dip. in Teaching |
| 15. | திருமதி.தனவதனி பேரின்பமூர்த்தி | SLTS – 2- II | B.A- (Hons) | M.Ed |
| 16. | திரு.கனகசபாபதி சிவநந்தவர்மன் | SLTS – 2- II | G.C.E.A/L | Dip. in Teaching |
| 17. | திருமதி.சிவகௌரி ஸ்ரீவைகுந்தராசா | SLTS – 2- II | G.C.E.A/L | Trd.in Primary |
| 18. | திருமதி.அ.ஜெ.அரஸ் டானியல் | SLTS – 2- II | B.A- (Hons) | Dip. in Ed. |
| 19. | திருமதி.ஹேமநந்தினி.தூயகுமாரன் | SLTS – 2- II | Dip. in Music | Dip. in Ed. |
| 20. | செல்வி. பாலசாயினி மயில்வாகனம் | SLTS – 3 I | G.C.E.A/L | Dip. in Teaching |

**கல்வி சாரா ஊழியர் விபரம்**

திரு. தே. அகஸ்ரின்

## இணைபாடவிதானச் செயற்பாடுகள்

கற்றல் கற்பித்தல் செயன்முறையில் வலிமைமிக்கதாக மாறியுள்ள இணைபாடவிதானச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் நடாத்துவதில் நாம் சிறப்பாகச் செயற்படுவதனூடாக ஆரம்ப, இடைநிலை மன்றச் செயற்பாடுகள் நடை பெறுவதுடன் பொதுப் போட்டிகளிலும் மாணவர்கள் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதுடன் சிறப்பான செயற்பாடுகளுக்காகவும் அவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள்.

## பதவி உயர்வுகளும் வாண்மை விருத்தியும்

எமது பாடசாலையில் கடந்த நான்கு வருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றிய ஆசிரியர் திரு .பா.சண்முகானந்தன் அவர்கள் அதிபர் சேவைக்குப் பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளமையை பாராட்டுவதோடு தனது புதிய சேவையிலும் சிறப்பான பணியினை ஆற்றுவதற்கு இறையருளை வேண்டுகின்றேன்.

## பழைய மாணவர்கள்

எமது பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் பழைய மாணவர்களது பங்களிப்பானது உன்னதமானது என்பதோடு அவர்களது ஈடுபாடானது பாடசாலையின் வளர்ச்சிசார் திட்டமிடல் செயன்முறையின் பக்க பலமாக விளங்குவதன் காரணமாக நாம் பல முன்னோடியான செயற்பாடுகளை மேற்கொள்ள முடிவதுடன் தேசிய ரீதியில் எமது பாடசாலை தேசிய விருதினைப் பெற்றுக் கொள்வதற்கும் பங்காற்றியுள்ளது. பாடசாலைசார் செயன்முறையின் போது எமக்கு தேவைகள் ஏற்படும் அனைத்துச் சந்தர்ப்பத்திலும் உதவிக்கரம் நீட்டும் பாடசாலை அன்னையின் புதல்வர்கள், புதல்விகள் அனைவரும் நல் வாழ்வு வாழ இறையாசியை வேண்டுகின்றேன்.

## இடமாற்றம்

எமது பாடசாலையின் கணித ஆசிரியராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற கணித ஆசிரியை திருமதி சு.சிவகணேசன் அவர்கள் எமது பாடசாலையில் ஆற்றிய சேவைக்காக நன்றி தெரிவிப்பதோடு இடமாற்றம் பெற்றுச் சென்ற பாடசாலையிலும் தனது சிறப்பான பணியினை ஆற்ற இறைவன் ஆசியை வேண்டுவதோடு . எமது பாடசால்லைக்கு இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ள ஆங்கில பாட ஆசிரியை செல்வி ம.பாலசாயினி அவர்களது சிறப்பான சேவை எமது பாடசாலைக்கு கிடைக்க இறையருளையும் வேண்டுகின்றேன்.

## சமூக நிறுவனங்களும் நலன் விரும்பிகளும்.

எமது பாடசாலையானது பல சமூக நிறுவனங்களுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணிவருவதாகவுள்ளது. அந்த வகையில் மாணவர்களது உள ஆற்றுபடுத்தலுக்காகவும் ஆளுமை விருத்திச் செயன்முறைக்காகவும் எம்மோடு இணைந்து பணியாற்றுகின்ற வளர்பிறை நிறுவனத்தினரது செயற்பாடுகள் பாராட்டுதலுக்குரியது. மேலும் எமது பாடசாலையின் தரம் ஐந்து மாணவர்களது கல்வி அடைவு நிலையில் அதிகூடிய அக்கறையினை எம்மோடு இணைந்த வகையில் மேற் கொண்டு வருகின்ற கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினரதும் பணிகள் பாராட்டுதலுக்குரியது. மாணவர்கள்

தமது இல்லத்தில் இருந்து கற்பதற்காக அவர்களுக்குச் சொந்தமாக மேசை, கதிரைகள் வழங்குவது சத்துணவுகள் சுகாதாரப் பொதிகள் வழங்குதல், கற்றல் சாதனங்களை வழங்குதல் என்பவற்றோடு எமது பாடசாலையில் தரம் ஐந்து மாணவர்களுக்கான கற்றல் வள நிலையத்தினை அமைத்துத் தந்துள்ளமையினையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

எமது பாடசாலை அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்விக் கோட்டத்திலுள்ள தனியார் பாடசாலைகளுடனும் நாம் நல்லுறவினைப் பேணுவதனூடாக அவர்களது பங்களிப்புக்களும் எமது பாடசாலை நோக்கித் திரும்பும் நிலையினையும் காணமுடிகின்றது அந்த வகையில் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவர் கழகங்களினூடாக நாம் சிறப்பான நன்மைகளை வருடாவருடம் அடைந்து வருவதனை நன்றியுடன் நினைவு கூருவதுடன் அத்தகைய நிலைக்காக பங்காற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவ முதல்வர்கள், மாணவர் கழக அங்கத்தவர்கள், தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் எமது பாடசாலைச் சமூகம் சார்பில் நன்றியறிதலினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பாடசாலையின் வள விருத்திகள்

பாடசாலையின் பௌதிக வளவிருத்தியானது குறிப்பிடத்தக்க நிலையினை அடைந்துள்ளமை நோக்கத்தக்க விடயமாகவுள்ளது. இவ் அதிகரிப்புக்கு புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் பழைய மாணவர்களதும் நலன் விரும்பிகளதும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பு பாராட்டத்தக்கதாகும். கற்றல் கற்பித்தலின் பண்புத் தரத்தினை நோக்காகக் கொண்டு பல்வேறு கற்றல் கற்பித்தல் சாதனங்களும் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

### கடந்த ஆண்டின் பெருமைக்குரிய பதிவுகள்

1. சிறந்த செயற்பாட்டுக்கான தேசிய விருது (Best Practices award 2015 ).
2. பொதுச் சுகாதார உத்தியோகஸ்தர்களுக்கான பயிற்சிக்களமாக எமது பாடசாலை செயற்பட்டமை.
3. புதிதாக இணைந்து கொண்டுள்ள அதிபர் சேவை உத்தியோகஸ்தர்கள் கள அனுபவம் பெறுவதற்கான களமாக எமது பாடசாலை தெரிவு செய்யப்பட்டிருந்தமை.

### எதிர்கால இலக்குகள்

1. யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளில் புலக்காட்சி மிக்க பாடசாலையாக விளங்குதல்.
2. கல்வியின் பண்புத்தர விருத்தியில் உன்னத நிலையினைப் பேணுதல்.
3. மாணவர் பாராளுமன்ற செயன்முறையினை நடைமுறைப்படுத்துதல்.
4. வழி காட்டல் ஆலோசனை அலகினைத் ஸ்தாபித்தல்.

### பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டோரின் இழப்பு

பாடசாலையின் வளர்ச்சிச் செயன்முறையில் நேரடியான பங்களிப்பினை நல்கிய அமரர் பஸ்தியாம்பிள்ளை சோமசுந்தரம், அமரர் கந்தசாமி ஜெயப்பிரதாபன் ஆகியோர்

இறைபதமடைந்துள்ளமை வருந்தத்தக்க விடயமாகவுள்ளது அவர்களது ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

**பாடசாலையின் உடனடித் தேவைகள்**

1. பாடசாலையில் பிரதான பாடமான கணித பாடத்துக்கு நிலவும் ஆசிரியர் இன்மை நிலையினை சீர்செய்தல்.
2. பாடசாலையின் இடைநிலைப் பிரிவுக்கான வகுப்பறைகள் வகுப்பறை நியமங்களுக்கேற்ப அமைக்கப்பட வேண்டியுள்ளமை.
3. பாடசாலையின் பயன் பாட்டுக்காக பொருத்தமான களஞ்சிய அறை அமைக்க வேண்டியுள்ளமை.
4. பாடசாலையின் கிழக்குப் புற எல்லைப் பகுதிக்கு மதில் அமைக்க வேண்டியுள்ளது

**நன்றியுரை**

இவ் விழா ஒழுங்கமைந்த முறையில் நடைபெறுவதற்கு அருள்பாலித்த இறைவனுக்கு முதற்கண் நன்றியினைக் கூறிக் கொண்டு இவ் விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு எம்மை மகிழ்வித்ததோடு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கி ஊக்குவித்த மதிப்பிற்குரிய கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.சு.சண்முககுமார் அவர்களுக்கும் அவர்தம் பாரியார் அவர்களுக்கும் பாடசாலைச் சமூகஞ்சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலையின் வளர்சிப் படியில் தமது அர்ப்பணிப்பான பங்களிப்பினை வழங்கி வருகின்ற பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் பாடசாலைச் சமூகத்தினர், சமூக நிறுவனங்களின் செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் எனது நிறைவான நன்றிகள் உரித்தாகுக.

எமது அழைப்பினை ஏற்று இங்கு வருகைதந்து விழாவினைச் சிறப்பித்த கல்விசார் உத்தியோகஸ்தர்கள் ஓய்வு பெற்ற அதிபர்கள், அயற்பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் பாடசாலைச் சமூகம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலையின் அனைத்துச் செயற்பாட்டிலும் ஆலோசனையும் ஒத்துழைப்பும் நல்கும் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கும் ஆதரவிற்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

**நடேசு தயாளன்**
M.Ed., M.A., PGDEM
**அதிபர்**
2016.06.20

# பாடசாலை சமூக உறவும் கல்விமுகாமைத்துவமும்

திரு.நடேசு தயாளன்

பாடசாலையானது தனியே மாணவர்களைச் சமூகத்துக்குப் பொருத்தமான வளர்ந்தோராக மாற்ற முடியாது என்பது கல்வித் துறைசார்ந்தவர்களது கருத்தாகவுள்ளது. இதுவொன்றே பாடசாலையும் சமூகமும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதற்கு போதுமான ஆதாரமாயுள்ளது. இதன் மூலமே அவர்களது இலக்குகள் அடைந்து கொள்ளப்பட முடியும். பாடசாலையும் சமூகமும் இணையும் போது பல்வேறு முகவர் அமைப்புக்களுடனான சேவையினை இலகுவான முறையில் அடைந்து கொள்ளப்படமுடியும். இதன் மூலம் பாடசாலை சார்ந்தவர்களிடம் நெருக்கம் அதிகரிக்கும். பொருத்தமானதும் விளைதிறனானதுமான இயைபாக்கம் மூலம் சமூகஅபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியும்.

பாடசாலையின் விளைதிறன் மற்றும் வெற்றிகரமான பாடசாலைகள் தொடர்பானஆய்வுகள் பின்வரும் விடயங்களை வலியுறுத்துவதாயுள்ளன.

1. சமூகஉறவு
2. பெற்றோர் ஈடுபாடு

சமூகம் என்பது ஒரு குழுவான மக்கள்தொகுதி சமூக பொருளாதாரக் கலாசார ரீதியிலான பரிமாற்றத்துடன் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு சமூகரீதியில் உதவுவதோடு பொதுவான விழுமியங்களைக் கொண்டவர்களாகவும் மற்றவர்களை இனங் காண்பவர்களாயும் இருக்கும் நிலையினைக் குறிப்பதாக அமைந்துள்ளது. இங்கு ஒரு தொடர்பாடற் கோலத்தினைக் கொண்ட மக்கட் கூட்டமானது தொடர்ந்தேர்ச்சியான தொடர்புகளைக் கொண்டிருத்தலோடு சார்ந்தியங்கும் உணர்வுகளுடன் செயற்படுவதாயும் இருக்கும்.

பாடசாலையும் சமூகமும் இணையும் போது வளப்பரிமாற்றம் அதிகரிக்கும். உபகரணப் பயன்பாடு அதிகரிக்கும். தொண்டடிப்படையிலான உதவியினைப் பெற்றுக் கொள்ளமுடியும். விசேடமாகத் துறைசார்ந்தவர்களின் உதவியினையும் சகோதர ஒத்துழைப்பினையும் பெற்றுக் கொள்ள முடியும். தகவல் தொடர்பாடற் தொழில் நுட்பவலைப்பின்னலால் அங்கீகாரமும் பொதுமக்கள் உறவும் வலுப்பெறல் திட்டமிடல் அமுலாக்கல் மதிப்பீடு செய்தலாகிய நிலைகளில் சந்தர்ப்பங்கள் ஏற்படலும் உள்ளகப் பயிற்சிநிலை தொழில் திருப்தி சமூகத் திறன் என்பனவும் வளர்ச்சியடைய முடியும்.

பாடசாலை சமூக உறவானது பாடசாலைகளை வலுவுள்ள சமூகக் கட்டமைப்புக்களாக மாற்றியமைக்கப்படப் பங்காற்றுவதாக இருக்கும். பாடசாலைகளின் இயலுமைகள் வலுப்பெறுவதோடு இளவயதினர் தொடர்பிலான பல்வேறு பிரச்சினைகள் இடம் பெறுவதும் தவிர்க்கப்படும். இத்தகைய உறவு நிலையினைக் கட்டியெழுப்புவதற்கு தூரநோக்கு தந்திரோபாயத் திட்டமிடல், ஆக்க பூர்வமான தலைமைத்துவம், புதிய பல்பரிமான நடிபாகம் உடைய வாண்மையாளர்கள் சமூகத்திலும் பாடசாலையிலும் இருத்தலவசியமாகும்.

இன்று பாடசாலையுடன் பல்வேறுபட்ட சமூக நிறுவனங்கள் பங்குதாரராயுள்ளனர். நாட்டிலுள்ள பல்வேறுபட்ட சேவை வழங்கும் நிறுவனங்கள் உள்ளூராட்சி அமைப்புக்கள். சேவைமன்றங்கள், இளைஞர் மன்றங்கள், விளையாட்டுக் கழகங்கள், சமூக

அடிப்படையிலான நிறுவனங்கள், கலைகலாசார அமைப்புக்கள், வெகுசனத் தொடர்பு சாதனங்கள் என்றவாறாக இதன் பரப்புவிரிந்த வண்ணமுள்ளன.

பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான உறவின் தன்மையானது பரஸ்பர ரீதியான அனுகுமுறை ஒன்றுக்கொன்று சார்புள்ளநிலை சமூகத்தினோர் அங்கம் பாடசாலையினதும் சமூகத்தினதும் நேரானதும் எதிரானதுமான உணர்வுகள் சமூகப் பொருளாதார அரசியல் நிலைகள் தொடர்பான சவால்கள் என்றவாறாக இது அமைந்து காணப்படுகின்றது.

பாடசாலைச் சமூகம் என்பது இரண்டு பிரிவுகளாகப் பிரித்து நோக்கப்படும்.

1. உள்ளகசமூகம் - அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள்
2. வெளியகசமூகம் - தனியாட்கள் நிறுவனங்கள்

பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பினை நோக்கும் போது சமூகத்தினைப் புரிந்து கொள்ளல் என்பது முக்கியமானதாகும். இதன் மூலமே சமூகத்தினுடைய சேர்க்கைகளைக் கட்டமைப்புக்களை அறிந்து கொள்ள முடியும். சமூகத்தினுடைய அபிப்பிராயத்தினையும் மனப்பாங்கினையும் அறிந்துகொள்ளலாம். சமூகத்திலுள்ள வளங்களை அறிந்துகொள்ளல் சமூகத்தின் தேவைகளையும் சமூகத்தின் பலத்தினையும் அறிந்து கொள்ளமுடியும் என்பதோடு பாடசாலையினதும் சமூகத்தினதும் பலவீனங்களையும் அறிந்து கொள்ளமுடியும். சவால்களையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு கொள்ளமுடியும்

பாடசாலை என்பது சமூகத்தினோர் அங்கமாக உள்ளதனால் அச் சமூகநிறுவனமானது சமூகத்துடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும் என்பதற்காக பின்வரும் காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

1. பாடசாலை செல்லும் வயதிலான பிள்ளைகளைச் சமூகத்திலிருந்தே பெறவேண்டியுள்ளமை.
2. மாணவர்களது அடைவுமட்டத்தினை உயர்த்துவதற்கு அதாவது கலைத்திட்டத்தினூடாக சமூகத்தினுடைய தேவைகளை அறிந்து அதனைப் பூர்த்தி செய்வதற்காகவும் பொருத்தமான கற்றல் அனுபவங்களூடாக தேசியமட்ட அடைவுகளை எட்டுதல்.
3. சமூகமானது பாடசாலைக் கல்வியின் உடனடி நுகர்வோராயுள்ளமை
4. கல்விக்கான பணமானது மக்களது வரிப்பணத்தினூடாகவே ஒதுக்கீடு செய்யப்படுவதனால் சிறந்த அடைவுகளைச் சமூகத்துக்கு வழங்கவேண்டியுள்ளமை.
5. சமூகத்தினது பங்களிப்பு அதிகரிப்பானது சிறந்த முதலீடாகும் என்பது தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளமை. (Fullan 1993Sarasono1990)
6. பொதுக் கல்வியானது சமூகத்துக்கு வழங்கப்படும் சேவையாகக் கொள்ளப்படல்.
7. சமூகமானதுபாடசாலைச் செயற்பாடுகளின் நுகர்வோனாகவும் அதனது வாடிக்கையாளராகவும் விளங்குதல்.
8. 21 ஆம் நூற்றாண்டின் கல்வி தொடர்பான மீள்சிந்தனை
9. பாடசாலை முகாமைத்துவத் தந்திரோபாயங்களில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு.

10. புத்தாக்கத்துக்கும் மாணவர் அடைவுக்கும் வளஅதிகரிப்புக்கும் வேண்டியஅரசியல் ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் அனுகூலமானவகையில் பெற்றுக் கொள்வதற்கு.
11. பாடசாலையும் சமூகமும் நன்மையினை அடைவதற்கு
12. பாடசாலைபற்றியும் அதன் சாதனைகள் பற்றியும் பகிரங்கப்படுத்தலைமேற் கொள்வதற்கு.
13. பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான தப்பபிப்பிராயங்களை இல்லாது செய்வதற்கு
14 பாடசாலையினைச் சமூகத்துடன் இணைப்பதற்கு.

இப் பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான உறவுநிலையினை நோக்கின் சில பாடசாலைகள் உயர்வான உத்தமமட்ட உறவுநிலையினைக் கொண்டதாகவும் சிலஉயர் மட்ட இடைமட்ட, குறைந்தமட்டத் தொடர்புடையதாகவும் அமைந்து காணப்படுகின்றன. இதற்கான தந்திரோபாயங்கள் சட்ட அடிப்படையிலானதாகவோ கட்டமைப்பு ரீதியிலானதாகவோ தலைமைத்துவம் சார்ந்ததாகவோ மனிதஉறவு ரீதியானதாகவோ போதுமான தகவல்களைச் சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்குவதாகவோ சிறந்த கல்வியினை வழங்குவதாகவோ காணப்படலாம்.

பாடசாலைச் சமூகஉறவுக்குப் பாடசாலை மட்டத்தில் அதிபர் ஆசிரியர்கள் பின்வரும் திறன்களைவிருத்தி செய்துகொள்வதோடு வெற்றிகரமான பங்குதாரர் மனப்பாங்கினையும் வளர்த்தல் அவசியமாகும். இதற்காகச் சமூகத்தினர் இவர்களை அனுகக்கூடியநிலை உளவியல் சார்ந்த நெகிழ்வுப் போக்குசெயற்பாட்டில் ஆர்வம் எல்லாம் நன்மைக்கே என்ற மனப் பாங்கு ஆபத்தினை எதிர் கொள்ளும் மனோநிலை ஆள்களிடையேயான தொடர்புகளைக் கட்டியெழுப்பக் கூடிய இயலுமைகளை வளர்த்துக் கொள்ளுதல் உறுதியாகக் கூறல் மற்றையோருக்கு சரியான முன்மாதிரியாக விளங்குதல் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தக் கூடியநிலை (C.Day 1998) ஆகிய திறன்களை வளர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

பெற்றோருடனான உறவினை சிறப்பான முறையில் மேற் கொள்ளவேண்டியது ஆசிரியர்களது கடமையாகும் பாடசாலை அனுபவங்களானது வாழ்க்கை நீடித்த தாக்கத்தினை விளைவிக்கக் கூடியதாக விளங்குகின்றது என்னும் போது கலைத்திட்டமானது பிள்ளைகளது வாழ்வில் பொருத்தமானதாக உள்ளமையை உறுதிப்படுத்தவதற்கும் ஆசிரியர்களிலும் பார்க்க தமதுபிள்ளைகள் பற்றிப் பெற்றோர் அதிகளவில் தெரிந்தவர்களாயுள்ளமையும் பெற்றோருடன் சிறப்பான உறவினைக் கட்டியெழுப்புவதன் அவசியத்தினை வலியுறுத்துவதாயுள்ளது.

பெற்றோர்களே தமது பிள்ளைகளின் கல்விக்கான தெரிவாளர்களாக உள்ளமை, பெற்றோர்களே தமது பிள்ளைகளுக்கான பாடசாலையினைத் தெரிவோராயுள்ளமை, பாடசாலைச் செயற்பாடுகளின் பங்குபற்றுநராகப் பெற்றோர் விளங்குதல் பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பில் தீர்மானம் மேற் கொள்வோராய் விளங்குதல் என்பன அவர்களது ஈடுபாட்டினை பாடசாலையில் வேண்டுவதாயுள்ளது.

பெற்றோரின் ஈடுபாட்டுநிலை தொடர்பில் ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய தகுதிகளாவன பெற்றோர்களின் ஆதரவு அவர்களுக்கு எத்தகைய நிலையில் உள்ளது என்பதனைத் தெரிந்து கொள்வதற்கான தந்திரோபாயங்கள், பெற்றோர்களை அவர்களது வழியிலேயே அனுசரித்துச் செல்வதற்கு நம்பிக்கையுடன் கூடிய உயர் வாண்மைத்துவ வகிபாகத்தினை அவர்கள் முன் மேற் கொள்வதற்கு வேண்டிய தேர்ச்சிகள் என்பன ஆசிரியர்களால் வளர்க்கப்படுதல் அவசியமானதாகும்.

**பாடசாலை- சமூக உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு பின்வரும் செயற்பாடுகளைமேற் கொள்ளமுடியும்.**

1..பாடசாலையின் வசதிவாய்ப்புக்கள் வளங்களைச் சமூகம் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குதல். பாடசாலையின் நிறைவுக்குப் பின்னா் பயன்பாடற்றுள்ள பாடசாலை வளங்களை இலாபநோக்கற்ற நிறுவனங்கள் பயன்படுத்துவதற்கான அனுமதியினை வழங்குதல். இதனை வழங்குவதன் மூலம் பாடசாலையையும் சமூகத்தினையும் இணைப்பதற்கான சந்தா்ப்பம் உருவாகும்.

2.பாடசாலை வாரத்தினை அனுசரித்தல். பாடசாலைக்குப் பொருத்தமான வாரமொன்றினைத் தெரிவுசெய்து அக் காலத்தில் பெற்றோரையும் சமூகத்தினரையும் பாடசாலைக்கு வருகைதரச் செய்வதனூடாக உறவினை எற்படுத்துதல்.

3.வேலைவாய்ப்பு -தொழில் வழிகாட்டற் தினத்தினை அனுசரித்தல். இத் தினத்தினை அனுசரிப்பதனூடாக சிறந்த கற்றல் அனுபவங்களை மட்டுமல்ல பாடசாலையின் தேவைகள் எதிர்பார்க்கைகள் தொடர்பான விழிப்புணா்வினையும் சமூகத்தின் மத்தியில் தோற்றுவிக்க முடியும்.

4. செய்திப் பத்திரிகை வெளியிடல். குறித்தகால இடைவெளியில் வெளியீடுகளை மேற் கொள்வதன் மூலம் பாடசாலை பற்றிய பகிரங்கப்படுத்தலினைச் சிறப்பான முறையில் மேற்கொள்ள முடிதல்.

5. பாராட்டி வாழ்த்துதல், குறிப்பிடத்தக்க சாதனைகள் பாடசாலையால் நிலைநாட்டப்படும் போது பாராட்டுக்கள் வாழ்த்துக்களை வெளியிடுதல்.

பாடசாலையினதும் சமூகத்தினதும் உறவுகள் திருப்திகரமானதாக அமையுமிடத்து பங்கேற்புத் திட்டமிடலினை மேற்கொள்ள முடியும். இது பாடசாலை வளர்ச்சிக்கு அளப்பரிய பங்காற்றுவதாக இருக்கும். சிறந்த தொடர்பாடற் கோலத்தினைக் கட்டியெழுப்புவதன் மூலம் பாடசாலையில் இருந்து வீட்டுக்கும் வீட்டில் இருந்து பாடசாலைக்கும் மாணவா் முன்னேற்றம் பற்றிய தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படும். என்பதோடு சமூகத்தின் மூலம் வளத்தினையும் பாதுகாப்பினையும் பெற்று ஒருங்கிணைப்பதன் மூலமும் சிறப்பான சேவையினை ஆற்றமுடியும். மேலும் சமூகத்திலுள்ள நிறுவனங்களுக்கும் பாடசாலைக்கும் இடையிலான தொடர்புகள் கட்டியெழுப்பப்படும் போது பாடசாலையின் உள்ளக உறுப்பினா்களின் திறன்கள் வளா்க்கப்படவும் முடியும்.

பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்புகளைக் கட்டியெழுப்பக் கூடிய பரப்புக்களாகப் பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்.

1.பொருளாதார ரீதியிலான பங்குபற்றல்கள்
2.பொதுவான சேவைகளும் உதவிகளும்
3.ஆய்வுசாா் செயற்பாடுகள்
4.கற்றல் கற்பித்தற் புலம்
5.பாட விதானம்

6.முகாமைத்துவப் புலம்

இத்தளங்களில் பாடசாலையில் இருந்து சமூகத்துக்கும் சமூகத்திலிருந்து பாடசாலைக்கும் தொடர்புகள் கட்டியெழுப்பப்படும்.

பாடசாலை சமூகஉறவுகளைக் கட்டியெழுப்புவதில் தடையாக உள்ள காரணிகளாக பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்

1. சமூகக் குழுக்களுக்கிடையிலான அதிகாரப் போட்டிநிலை. அல்லது பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான இழுபறிநிலை
2. பாடசாலை தனது தனித்துவத்தினைக் கட்டுப்பாட்டினை இழக்கும் என்ற பயநிலை
3. பாடசாலையின் ஈடுபாடு அல்லது பங்குபற்றல் தொடர்பான உடன்பாடற்றநிலை
4. அதிபர்கள் ஆசிரியர்கள் சமூகத்துடன் இணைந்து செயற்படவிரும்பாமை
5. பெற்றோரின் அர்ப்பணிப்பற்றநிலை
6. பொருத்தமற்ற கலாசாரக் கோலம் பாடசாலைச் சுற்றாடலில் கட்டியெழுப்பப்படல்
7. பெற்றோர் தொடர்பான ஆசிரியர்களின் புலக்காட்சிநிலை
8. பொருத்தமற்றகல்வி முகாமைத்துவம்
9. பாடசாலை தொடர்பான சமூகத்தின் நம்பிக்கையீனங்கள்

பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான இருபக்கத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதன் மூலம் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளமுடியும். கூட்டுறவு நிலையினை வளர்த்துக் கொள்ளுதல், தொழிற்பிரிப்பு வளங்களை அதிகரித்தல், உரித்தாளர் மனப்பாங்கினைக் கட்டியெழுப்புதல், விளைதிறனினை அதிகரித்தல், ஊக்குவித்தல், மதிப்பீடு செய்தல் போன்ற செயற்பாடுகள் இலகுவான முறையில் இடம்பெற முடியும்.

சமூக உறவுச் செயற்திட்டங்களை உருவாக்குதல் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் கண்காணித்தல், மதிப்பிடல் செயற்திட்டங்களை கட்டியெழுப்பி பொருத்தமான தொடர்பாடல் வலைப் பின்னலினை உருவாக்குதல் பாடசாலையின் இயலுமையினை கட்டியெழுப்பி பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்தல், இதற்காகப் பொருத்தமான வேலைத்திட்டத்தினைத் தயாரித்தல், பொருத்தமான தேர்ச்சிகளை அடைந்து கொள்ளல் என்பன தொடர்பான தெளிவுடன் கல்வி முகாமைத்துவச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதனூடாக பாடசாலைச் சமூக உறவுகள் வலுவடையும் என்பது தொடர்பில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது.

********

# மொழி தொடர்பான கொள்கைகளும் கற்றல் செயன்முறைகளும்

**திருமதி சிவகௌரி ஸ்ரீவைகுந்தராசா**

ஒவ்வொரு மாணவரும் மொழித்திறன்களைச் சிறப்பாக விருத்தி செய்தல் அவசியமாகும். இந்நிலையில் மொழித்திறன்கள் எனப்படுவது செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்ற நான்குமாகும். இவை நான்கும் அடிப்படை மொழித்திறன்கள் ஆகும். ஒரு மாணவனுக்கு கணிதத் தேர்ச்சியை ஊட்டுவதற்கு கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்ற அடிப்படைத் திறன்கள் தெரிந்திருப்பது போன்று மொழித்திறன் தேர்ச்சிகளை அடைய மேற்கூறிய நான்கு திறன்களும் அவசியமாகும். இந்நான்னும் பிள்ளைகளின் வளர்ச்சிப் பருவங்களுக்கேற்பக் காணப்படும். இவ் வளர்ச்சிப் பருவங்களுக்கேற்ப கற்றல் வேகமும் வேறுபட்டுக் காணப்படும். இவ்வாறான விடயங்களை கற்பித்தலில் ஈடுபடுபவர்களும், கற்பித்தலில் அக்கறை கொண்டோரும் கருத்திற் கொண்டு செயற்படுதல் அவசியமாகும்.

செவிமடுத்தல் திறன்களை விருத்தி செய்ய செவி மடுத்துச் செயற்படல், செவிமடுத்து வரைதல், செவிமடுத்து ஆக்குதல் ஆகிய செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்தல் வேண்டும். செவிமடுத்தல் திறன் என்பது வெறுமனே கேட்டல் மட்டுமல்ல, மாறாக கேட்டலை கிரகித்து காரியமாற்றுதல், வினாக்கள் வினாவுதல் பொருத்தமான விடையளித்தல் போன்ற செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துதல் என்பவற்றையும் உள்ளடங்கியதாகும்.

அடுத்து பேச்சுத் திறன்களை விருத்தி செய்ய உரையாடல், கதை கூறல், பாடல்களை தொனி வேறுபாட்டுடன் பாடுதல், படம் ஒன்றை விபரித்தல், சிறிய தலைப்பில் பேசுதல் போலச் செய்து செயற்படுதல், சிறிய நாடகங்களினை நடித்தல் ஆகியன அவசியமானதாகும். இனி மூன்றாவது அடிப்படை மொழித்திறனான வாசித்தலை விருத்தி செய்ய பார்வை பிரித்தறிகை திறன்களையும் இடமிருந்து வலமான திசைமுகப்படுத்தலையும் கவனத்திற் கொள்ளவேண்டும். எழுத்துக்களின் ஒலி - வரி வடிவங்களைச் சொற்களில் இனங்காணல். சொற்பொருளைத் தேடியறிதல், மேலதிக வாசிப்பு நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட பந்தியை, கதையை வாசித்தல், விளம்பரங்கள் - அறிவித்தல்கள் வாசிப்பு ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல் வேண்டும்.

இனி இறுதியான அடிப்படை மொழித்திறனான எழுத்துத் திறன்களை விருத்தி செய்ய கை - கண் இணைத்தல், கதிரையில் அமரும் பயிற்சி நிறந்தீட்டுதல், பொருட்களைச் சுற்றி வரைதல், சுவடு வரைதல், கோடுகள் வரைதல், புள்ளிக் கோடுகள் முறிகோடுகளை இணைத்து உருவங்கள் வரைதல், எழுத்துக்களின் வடிவங்கள் மீது வரைதல், அச்சுப்பதித்தல், மணல் தட்டில் எழுதுதல் போன்ற செயற்பாடுகளிலும் நெறிப்படுத்தலுடனான சொற்கள் வாக்கியங்கள் என்பவற்றை அமைத்தல், ஆக்கி எழுதுதல், சட்டகங்களை எழுதுதல் ஆகிய செயற்பாடுகளிலும் ஈடுபடச் செய்யவேண்டும். இந்நிலையில் எழுதுதல், வாசித்தல் என்ற அடிப்படை மொழித்திறன்கள் பாடசாலையிலே தான் பெரும்பாலும் நடைபெறுவதால் இச் செயற்பாடுகளில் அதிக கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகின்றது.

மேற்கூறிய செயற்பாடுகள் யாவும் முன்னர் குறிப்பிட்டது போல் பிள்ளைகளின் வளர்ச்சிப் பருவங்களுக்கேற்ப வேறுபடுவதுடன் கற்றலில் வேகத்தையும் அதிகரிக்கின்றது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களை மூன்று முதன்மை நிலைகளில் பிரித்து ஒவ்வொரு முதன்மை நிலையிலும் மாணவர்கள் அடையவேண்டிய இந்நான்கு மொழித்திறன்களுக்குமான தேர்ச்சிகளும் திட்டமிட்டு வகுக்கப்பட்டுள்ளன. முதன்மை நிலை ஒவ்வொன்றுக்குமுரிய வகையில் இச்செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதற்கான காரணம் விருத்தி என்பது வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் நிற்காது தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு செயற்பாடாகும். ஒவ்வொரு பருவத்திலும் விருத்தியல் சிறப்புகள் காணப்படும். இந்த வளர்ச்சி - விருத்தி ஓர் ஒழுங்கு முறையில் அமைந்த வளரச்சிப் போக்கினைக் கொண்டிப்பதும் எல்லாப் பிள்ளைகளிடமும் இது ஓர் ஒத்த தன்மையாயிருப்பதையும் அவதானிக்க முடியும்.

மேற்கூறிய ஒழுங்கு முறையில் அமைந்த வளர்ச்சிக்கும் ஒத்த தன்மைக்கும் பல காரணங்களை மொழியிலாளர்கள் கூறியுள்ளார். இந்த வகையில் நோம் சோம்ஸ்கி (Noam Chomsky) என்பவரது கொள்கையை எடுத்து நோக்கலாம். 'உலகம் முழுவதிலும் வாழும் பிள்ளைகள் தாய்மொழியறிவை ஒரே மாதிரியாக வளர்க்கின்றார்கள் விருத்தி செய்கின்றார்கள்' என தனது ஆய்வின் மூலம் எடுத்துரைக்கின்றார். இக்கொள்கையானது மொழி கற்றல் தொடர்பான அனைத்துலக செயன்முறைகள் பற்றிய பொதுமைக் கொள்கையாக இன்று காணப்படுகின்றது. பல்வேறு நாட்டு உளவியலாளர்களும் மொழியியல் ஆய்வாளர்களும் பிள்ளைகள் எவ்வாறு பேசப்பழகுகின்றார்கள் என்ற கொள்கைகளை உருவாக்க சோம்ஸ்கியின் இக்கொள்கை உதவியுள்ளது.


இதேபோன்று ஏன், எங்கே, எப்படி, யார் போன்ற வினாக்களைக் கேட்டு பெரியவர்களை திக்குமுக்காடச் செய்யும் திறன் படைத்தவர்களாக ஒவ்வொரு குழந்தையும் காணப்படுகின்றது. மேலும் புதிய காட்சிகள், சம்பவங்கள் என்பவற்றை ஆவலுடன் பார்த்து அவை பற்றி அறியும் ஆர்வத்தையும் எல்லாப் பிள்ளைகளும் கொண்டிருக்கும், இந்நிலையைப் 'பங்கேற்கும் உத்தேசங்கள் என்று ஜெரோம் புறூனர் (Jerome Bruner) கூறுகின்றார். பிறந்த குழந்தையானது சில நாட்களிலேயே ஒளிக் கற்றையைப் பின் தொடர்ந்து பார்க்கும் என்றும், குறிப்பாகத் தாயின் பார்வையைப் பின் தொடர்ந்து பார்க்கும் என்றும், அதன் பார்வை செல்லும் என்றும் புறூணர் குறிப்பிடுகிறார். இத்தகைய ஒரு நிலை மிக ஆரம்ப காலத்திலிருந்தே பிள்ளைகள் ஏனையோருடன் கற்றல் அனுபவங்களை பார்த்தோ - கேட்டோ அறிய ஆயத்தமாக உள்ளனர் என்பதை நிரூபிக்கின்றது. புறூனர் இச்செயற்பாட்டின் மூலம் பிள்ளைகளின் ஆக்கத்திறன், கற்பனையாற்றல் என்பவற்றை வளர்க்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பசி, பயணம், வசதிக்குறைவு போன்ற காரணங்களுக்காக பிள்ளைகள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளுகின்றனர். மேலும் தம்மைச் சுற்றியுள்ளவற்றையும், சுற்றி நட்பன பற்றியும் அறியும் ஆவல் கொண்டதாக ஒவ்வொரு பிள்ளையும் காணப்படும். மேலும் தன் ஆளுமையை விருத்தி செய்ய ஒவ்வொரு குழந்தையும் முயற்சி செய்கின்றது. மொத்தத்தில் தான் உயிர் வாழ்வதற்கும் தனது இடத்தை உறுதிப்படுத்துவதற்கும் ஒவ்வொரு குழந்தையும் உந்தப்படுத்துகின்றது. இந்த உந்துதலில் விளைவாக தொடர்படுவதற்குரிய தேவை, நாம் வாழும் உலகத்தைப் புரிந்து கொள்ளும் தேவை, தம்மைச் சுழவுள்ளவற்றைக் கட்டுப்படுத்தும் தேவை என்பன எல்லாக் குழந்தைகளுக்கும் இயற்கையான, இயல்பான தேவையாக இருக்கின்றது. இந்நிலையில் பிள்ளையால் கற்காமல் இருப்பதென்பது முடியாத காரியமாகின்றது. இவற்றை ஆய்வு ரீதியாக பிறவுண் (Brown) பெல்லூஜி (Bellugi) மைக்கல் ஹலிடே (Michal Haliday) றூக்கியா

ஹஸன் (Ruguia Hassan) கிராண்டா பிசெக்ஸ் (Michal bissex) ஆகிய ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

மேற்கூறிய கருத்துக்களிலிருந்து ஒவ்வொரு பிள்ளையும் பல்வேறு சிறப்பியல்புகளுடன் புதியவற்றை அறியும் மனப்பாங்குடன் அதற்குரிய திறன்களுடன் பிறந்துள்ளது என்பதை ஆசிரியர்கள் மனங்கொள்ள வேண்டும். இந்நிலையில் பிள்ளைகளை அன்போடு அரவணைத்து கற்பித்தல் பணியை செவ்வனே நிறைவேற்றினால் எல்லாப் பிள்ளைகளும் தேர்ச்சி மட்டத்தினை எய்துவார்கள். கற்பித்தல் என்பது வழிகாட்டும் பணி. அறிய ஆர்வமுள்ளோராய் பிள்ளைகள் உள்ளபோது அவர்களுக்கான தூண்டுதலே ஆசிரியரின் கடமை ஆகும். இங்கு ஆசிரியர்கள், மாணவர்கள் நிரப்பப்பட வேண்டிய பாத்திரமாக அன்றி ஏற்றப்பட வேண்டிய தீபமாய் நினைக்கவேண்டும்.

உசாத்துணை
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
அகவிழி சஞ்சிகை





கல்வி அமைச்சின் பாடசாலைக்கான சிறந்த செயற்பாட்டு விருதை
பெற்றமைக்காக பழைய மாணவர்கள் நலன் விரும்பிகளால் பாராட்டப்பட்ட போது



இல்ல மெய்வல்லுநர் போட்டி 2016



கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு
உதவிவழங்கல் - பெற்றோர் ஒருவர் பெற்றுக்கொள்கிறார்



அதிபர் சேவை - III இற்கு தெரிவு செய்யப்பட்ட
உத்தியோகத்தர்களுக்கான களப்பயிற்சியின் போது

# இயற்கையின் பருவநிலை மாற்றங்களும் சவால்களும்

**திருமதி. பா. சற்குணநாதன்.**

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் நீண்ட காலத்திற்குக் காணப்படும் வெப்பநிலை, ஈரப்பதன், வளிமண்ட அமுக்கம், காற்று, மழைவீழ்ச்சி, வளிமண்டலத் துணிக்கைகளின் எண்ணிக்கை மற்றும் வானிலை மூலங்கள் என்பவற்றின் புள்ளிவிபரவியலே பருவ நிலைகளைத் தீர்மானிக்கின்றது. இதனடிப்படையில் ஒரு நீண்ட காலத்தின் சராசரிக் காலநிலையே பொதுவாகப் பருவநிலையாக வரையறுக்கப்படுகின்றது. உலக வானிலை அமைப்பின்படி காலநிலை அளவானது முப்பது வருடங்களிற்கு மேற்பட்டதாக இருக்கவேண்டும்.

புள்ளி விபரவியல் ரீதியாகச் சராசரிப் பருவநிலையில் குறிப்பிட்ட விலகல் அல்லது வேறுபடும் தன்மையே பருவநிலை மாற்றமாகும். இது பல தசாப்தங்கள் அல்லது அதற்கும் மேற்பட்ட கால அளவுக்கு ஏற்புடையதாகும். இன்று முழு உலகிலும் உள்ள உயிர் வாழ்வனவற்றுக்கும் இயற்கை அமைப்பிற்கும் முதன்மைச் சூழலியல் அச்சுறுத்தலாக இருப்பது பருவநிலை மாற்றமாகும்.

மனித வாழ்வை மேலும் சௌகரியமாக மாற்றுவதற்கான மனித நடவடிக்கைகளும், புவி - வளிமண்டல அமைப்பில் நிகழும் மிக பொதுவான உள்ளகமாற்றமே இத் தன்மையாகும். ஓர் நூற்றாண்டுக்கு முன்பே வளிமண்டலத்திலுள்ள வாயுத் தொகுதியின் மாற்றத்தினால் பருவ நிலை மாற்றமும் விசேடமாக பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பும் ஏற்படுமென விஞ்ஞானிகள் எச்சரித்து இருந்தனர். இருந்தும் இச்செய்தியானது அப்போது கொள்கை வகுப்பினர்களால் கவனத்தில் எடுக்கப்படாததினால் கடைசியில் மீள முடியாத பாதிப்புக்கு இட்டுச் சென்றுள்ளது.

வளிமண்டலமானது பிரதானமாக 78% நைதரசனையும் 21% ஒட்சிசனையும் மீதியாக வேறு பல வாயுக்கள் தூசு துணிக்கைகள் கொண்ட புவியீர்ப்பு விசையினால் பூமியைச் சூழ்ந்துள்ள ஒரு படையாகும். இதில் 'மீதியாக' உள்ள வாயுக்களிலே நாம் கவனத்தைச் செலுத்துவோமாயின் அவையே புவி உஷ்ணமடைதலில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மனித நடவடிக்கைகளின் போது வெளிவிடப்படுகின்ற நான்கு முக்கிய வாயுக்களாக காபனீரொட்சைட்டு ($CO_2$) மெதேன் ($CH_4$) நைதரசன் ஒட்சைட்டு ($N_2O$), குளோரோ புளோரோ காபன் என்பவற்றை நோக்குவோமாயின் அவையே புவி உஷ்ணமடைதலில் பங்கு கொள்ளும் பச்சை வீட்டு வாயுக்கள் என அறியப்பட்டுள்ளன.

பச்சை வீட்டுத் தாக்கம் என்பதை நோக்கின் சூரியனால் வெளி வீசப்படும் பெரும்பகுதி கதிர் வீச்சானது பூமியின் மேற்பரப்பை அடைகின்றது. உள்வாங்கப்படும் இந்த சக்தி பூமியை வெப்பம் அடையச் செய்கின்றது. வெப்பமடைந்த பூமி இச் சக்தியை நீண்ட அலை கீழ்ச் செந்நிறக் கதிர்ப்பாக வளிமண்டலத்துக்குள் வெளிவிடுகின்றது. இச்சக்தி பச்சை வீட்டு வாயுக்களால் உறிஞ்சப்பட்டு பூமியின் வளிமண்டலத்தொகுதியை வெப்பமாக்குகின்றது. இது பச்சை வீட்டுத் தாக்கம் எனப்படுகின்றது.

பருவகால மாற்றமானது தற்காலத்தில் அதிகரித்து வருவதை நோக்கக் கூடியதாயுள்ளது. வளிமண்டலத்தின் பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரித்த செறிவினால்

ஏற்பட்ட பூகோளம் வெப்பமடைதலானது பருவ கால மாற்றத்துடன் தொடர்பு பட்டுள்ளது. மனித நெருக்கடியினால் எதிர்கொள்ளும் நிலத்தடி எரிபொருள் பாவனையினாலும், மனிதனின் ஏனைய நடவடிக்கைகளினாலும் ஏற்பட்ட பாதிப்பு உலகின் பல பாகங்களிலும் அவதானிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகள் பச்சை வீட்டுத் தாக்கத்திற்குக் காரணமான வாயு வெளியேற்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய நிலையில் உள்ளது. அளவில் கூடிய வரிசையில் பச்சை வீட்டு வாயுக்களான நீராவி, காபனீரொட்சைட்டு ($CO_2$), மெதேன் ($CH_4$) நைதரசன் ஒட்சைட்டு ($N_2O$), ஓசோன் ($O_3$) மற்றும் குளோரோபுளோரோ காபன் (CFC) என்பன காணப்படுகின்றன.

இவ்வாயுக்களின் விகிதாசாரமான சில நூறு வருடங்களாக குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாக அவதானிப்புக்கள் காட்டுகின்றன. கைத்தொழில் புரட்சியைச் சூழவுள்ள காலப்பகுதியில் உண்மையான அதிகரிப்பு ஆரம்பித்துள்ளது. கைத்தொழில் புரட்சியின் காலந்தொட்டு மனித நடவடிக்கைகளான நிலத்தடி கீழ் எரிபொருள் பாவனை, நிலப்பாவனையில் ஏற்பட்ட மாற்றம் (காடழிப்பு) ஆகியவற்றின் விளைவுகளினால் பருவகால மாற்றமானது ஆர்முடுகல், அதிகரித்து வருவதை நோக்கக் கூடியதாயுள்ளது.

உலக சக்தி அமைப்பானது புவியின் கீழ் உள்ள எரிபொருள் பாவனையில் தொடர்ந்து பெருமளவில் தங்கியிருத்தலானது இனிவரும் தசாப்பதங்களில் பருவநிலை மாற்றத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மனிதனால் தூண்டப்பட்ட பருவநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவை அறிந்து கொள்ள அரசாங்க குழுவின் மதிப்பீட்டினை நோக்குவோமாயின் புவி மேற்பரப்பின் சராசரி வெப்பநிலையானது $0.6^{0}$c யினால் கடந்த நூற்றாண்டில் அதிகரித்துள்ளது. இது மேலும் $1.8^{0}$c இல் இருந்து $6^{0}$c வ ரை இந்த நூற்றாண்டின் முடிவில் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது.

வளி மண்டலத்திற்கு எல்லைகள் இல்லாமையினால் பருவநிலை மாற்றமானது முழு உலகினையே பாதிக்கின்றது. அத்துடன் பூகோள பருவ நிலை மாற்றமடைதலினால் இலங்கையின் காலநிலை மாற்றத்தை நோக்குவோம். இலங்கையின் காலநிலை மாற்றத்தை நோக்கும் போது விவசாயம், நீர் நிலைகள், வாழ்விடம், சக்திப்பகுதி, போக்குவரத்துப் பகுதி, சுகாதாரப் பகுதி போன்ற பகுதிகளில் பாரிய தாக்கம் ஏற்படுவதை நோக்கமுடிகின்றது. இலங்கை ஒரு வளர்முக நாடாகவும் ஒரு தீவாகவும் இருப்பதனால் பருவநிலை மாற்றங்களினால் மிக மோசமாகப் பாதிப்படைந்து வருகின்றது.

கூடிய சனத்தொகை, நகரமயமாக்கப்பட்ட கரையோர வலயங்கள் போன்ற காரணிகளினால் இலங்கையின் கடல்மட்ட உயர்வு நேரடி தாக்கத்திற்கு உட்படுத்தப்படலாம். கடல் மட்ட அதிகரிப்பானது மனித வாழ்விடங்கள், சுற்றுலா அமைப்பு, வாழ்வாதாரம், வெள்ளத்தினால் விவசாயம் செய்யப்படும் இடங்கள், நன்னீரில் உவர்தன்மை சேர்தல், மற்றும் பொதுத்தேவையான குடிநீர் என்பவற்றில் தாக்கத்தை உண்டு பண்ணுகின்றன. கடல்மட்ட உயர்வினை எதிர்வு கூறுகையில் கடந்த காலங்களில் ஒரு மாறிலிப் பெறுமானமாக அதிகரித்து வரும் அபாயத்தினை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இலங்கையில் கூடுதலாக கரையோரப்பகுதிகளில் வாழும் மீனவ சமூகம் இடம்பெயர்ந்து 'காலநிலை அகதிகள்' எனும் நிலைக்குத் தள்ளப்பட வேண்டி வருவதுடன் அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும் நிலைக்கு காணப்படுகின்றது.

காலநிலை மாற்றமானது இலங்கையின் விவசாயத்தில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. வெப்பநிலை, மழை வீழ்ச்சி என்பவற்றில் ஏற்படும் மாற்றம் பயிர் உற்பத்தியில் குறிப்பிட்டளவு செல்வாக்குச் செலுத்துகின்றது. நீண்டகாலப் போக்கில்

நோக்கின் வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் வரட்சிக்குள்ளாவதுடன், நாட்டின் தென்மேற்கு வரண்ட வலயங்கள் உயர்ந்த மழை வீழ்ச்சியைப் பெறும் வாய்ப்புக்கள் ஏற்படலாம். இம்மாற்றங்கள் பயிர் உற்பத்தியினை தரரீதியிலும் அளவு ரீதியிலும் பாதிப்படையச் செய்கின்றன. அத்துடன் பாரிய காலநிலை மாற்றங்களின் தொடர்ச்சியான வரட்சி, சூறாவளி, புயல் ஆகியனவும் பாதிப்பைக் காட்டுகின்றன.

வெப்பநிலை அதிகரிப்பைச் சமாளிப்பதற்காக, வளியை குளிராக்கல், காற்றோட்டத்தினை ஏற்படுத்துதல் போன்றவற்றிற்கான சக்தித் தேவைகள் அதிகரிக்கும் அதேவேளை மறுபுறம் நீர்த் தேக்கங்களில் இருந்து ஆவியாகும் நீரின் அளவு அதிகரிப்பதனால் நீர் மின் உற்பத்தியினளவு பாதிக்கப்படுகின்றது. இதன் காரணமாக மின் சக்தி தேவையை பூர்த்தி செய்யமுடியாத நிலையில் அனல் மின் உற்பத்திக்கான வாய்ப்பு அதிகரிக்கின்றது. இதனால் Green House Gas (GHG) இன் அளவு வளமண்டலத்தில் அதிகரித்து புவி வெப்படைதலினால் ஏற்படும் மோசமான காலநிலைக்கு மேலும் வழிவகுக்கின்றது.

வெப்பநிலை அதிகரிப்பினால் நுளம்பின் பெருக்கம் அதிகரிக்கின்றது. உதாரணம் டெங்கு, மலேரியா, மற்றும் தொடர் பாடலின் மூலம் ஏற்படும் தோல் நோய்கள், சுவாச ஒழுங்கீனம் போன்ற உபாதைகள் ஆகியனவும் வெப்ப அதிகரிப்பினால் அடிக்கடி ஏற்பட்டு சுகாதாரச் சீர்கேடுகள் உருவாக வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

நாட்டின் தென்பகுதியில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் மத்திய நாட்டின் மலைப்பகுதியில் மண்சரிவுகள் ஏற்பட்டு, தெருக்கள், புகையிரதப் போக்குவரத்துக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. அத்துடன் கரையோர மண் அரிப்பு, கடல் மட்ட அதிகரிப்பு என்பன புகையிரதப் பாதை தெரு என்பவற்றைக் கடற்கரையில் இருந்து உள்நோக்கி நகர்த்துவதற்கான தேவையை அதிகரித்து பெருமளவு செலவினை ஏற்படுத்த ஏதுவாக அமைகின்றது.

ஆகவே, புவி வெப்பமடைதலைத் தடுப்பதற்கு வளிமண்டலத்தில் சேரும் பச்சை வீட்டு விளைவு வாயுக்களின் அளவைக் குறைக்கவேண்டும். சூழலில் சேருகின்ற காபனீரொட்சைட் அளவினைக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

புவி வளத்தைப் பாதுகாப்பதற்கு இயன்ற வரை காடழித்தலைத் தடுப்பதுடன் புதிய மரங்களையும் வளர்ப்பதற்குரிய திட்டங்களை மேற்கொள்வதுடன் மினசவக்தி வளப் பயன்பாட்டினையும் குறைத்து நீர்வளம் பேண நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

உலகில் ஏற்படும் தீவிர காலநிலை மாற்றங்களினால் 'எதிர்காலத்தில் நீருக்கான போட்டி ஏற்படலாம்' என மறைந்த இந்திய முன்னாள் ஜனாதிபதியும், விஞ்ஞானியுமாகிய டாக்டர் அப்துல்கலாம் கூறிய கருத்தை நோக்கின், எதிர்கால விழிப்புணர்வு எமக்குத் தேவைப்படுகின்றது.

முடிவாக நாம் எமது வாழ்க்கை முறையின் சிறிய மாற்றங்களைச் செய்வோமாயின் எதிர்காலத்தில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தமுடியும். விஞ்ஞானிகள், அரசாங்கங்கள், மற்றும் தனிநபர்கள், அச்சுறுத்தல்களைச் சமாளிக்க ஒருங்கிணைந்து செயற்பட்டு இயற்கை வளத்தைப் பாதுகாக்க முடியும்.

******

# நிறுவன முரண்பாடுகளை முகாமை செய்தல்
## (Managing Organizational Conflicts)

திரு. பா. சண்முகானந்தன்

அறிமுகம் :

பாடசாலை எனும் நிறுவனம் வினைத்திறனுடன் செயற்படுவதற்கு அங்குள்ள முரண்பாடுகள் சரியான முறையில் முகாமை செய்யப்படல் வேண்டும். சரியான முறையில் முகாமை செய்வதன் மூலம் சாதகமான விளைவுகளை பாடசாலைகள் அனுபவிக்க முடிவதுடன் பாதகமான விளைவுகள் ஏற்படாது தவிர்க்கவும்முடியும். பாடசாலைகள் மனித பௌதீகவள வசதிகளை உயர்வாகக் கொண்டிருப்பினும் முரண்பாடுகள் உத்தம மட்டத்தில் பேணப்படும் போதே அவை விளைதிறன் மிக்கவையாக மிளரமுடியும்.

மனித நடத்தைக் கோலங்களினால் ஏற்படும் முரண்பாடுகள் நிறுவனங்களின் சாதகமான செயல் நிலைகளையோ அல்லது பாதகமான செயல் நிலைகளையோ தோற்றுவிக்கலாம். இவ்வகையிலே முரண்பாடுகள் இருவகையில் நோக்கப்படுகின்றன.

**செயலாக்க முரண்பாடும், செயலாக்கத்தைப் பாதிக்கும் முரண்பாடும்**
(Functional and Disfunctional conflict)

பாடசாலையின் நாளாந்த செயற்பாடுகளின் போது எழுகின்ற வழமையான முரண்பாடுகள் செயலாக்க முரண்பாடுகள் எனப்படுகின்றன. இவற்றினால் நிறுவனத்தின் செயற்றிறன் விருத்தியடைவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. பொதுவாக ஏற்படும் முரண்பாடானது, புதுமையான கருத்துக்கள், சிறந்த தீர்மானங்கள் என்பவற்றிற்கு இட்டுச் செல்லுமாயின் அது செயலாக்க முரண்பாடாகும். செயலாக்க முரண்பாடுகள் இலக்கினை அடைந்து கொள்ள உதவக் கூடியன. மறுபுறம் நிறுவனம் ஒன்று முரண்பாடு ஒன்றின் காரணமாக நீண்ட காலத்தில் குறைந்த விளைத்திறனுடையதாக மாறுமாயின் அத்தகைய முரண்பாடு செயலாக்கத்தைப் பாதிக்கும் முரண்பாடாகும். இத்தகைய முரண்பாடு தனிநபர்கள், குழுக்கள் என்பவற்றுக்கிடையில் ஒத்துழைக்கும் தன்மையைக் குறைப்பதுடன் ஊழியரது விளைத்திறனைக் குறைத்து நிறுவனம் இலக்குகளை அடைவதையும் தடைப்படுத்துகின்றது. இந்நிலையில் ஊழியர் திறமையாக செயற்படுவதற்குப் பதிலாக தமது சக்தியினை சண்டையிடுவதிலும் விவாதிப்பதிலும், சதி செய்வதிலும் செலவிடும் நிலை தோன்றுகின்றது.

**முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்கள்**

பாடசாலை ஒன்றில் முரண்பாடுகள் பல்வேறு காரணிகளால் ஏற்படுகின்றன. பாடசாலைகளில் முதல்நிலை முகாமையாளர்களாக விளங்கும் அதிபர்கள் இக்காரணிகளை விளங்கிக் கொண்டாலே சரியானமுறையில் அவற்றினை முகாமை செய்யமுடியும். முரண்பாட்டுக்கான காரணங்களை பின்வருமாறு காட்டலாம்

தனிநபர்களின் ஆளுமை வேறுபாடுகள்.

தனிப்பட்ட பண்புகள் வேறுபடுவதால் தோன்றும் முரண்பாடுகள், தனிப்பட்ட காரணிகள் மாற்றப்படமுடியாதவை என்பதால் முரண்பாட்டை தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்டோரை பௌதீக ரீதியாக அமைப்பு ரீதியாக பிரிக்க வேண்டியது அவசியமாகின்றது.

**புலனுணர்விலான வேறுபாடுகள்**

வெவ்வேறு பிரிவினர் ஒரே தகவலுக்கு வெவ்வேறு அர்த்தங்களை கொடுக்கிறார்கள். இதனால் முரண்பாடுகள் எழுகின்றன.

**இலக்குகளிலான வேறுபாடுகள்.**

இலக்குகள் ஒன்றுக்கொன்று பொருந்தாத நிலையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

**அந்தஸ்தை வெளிப்படுத்தும் அடையாளங்கள்**

ஊழியரது அந்தஸ்தின் அடையாளங்கள் மூலமாகவும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அந்தஸ்தின் அடிப்படையில் வழங்கப்படும் வசதிகள், சலுகைகளே இதற்கான காரணமாகும்.

**பாரபட்சம் காட்டுதல்**

ஊழியரை பாரபட்சமாக அல்லது ஏற்றத்தாழ்வாக நடாத்துவதனால் ஏற்படும் முரண்பாட்டினை குறிக்கும்,

**செய்தித் தொடர்புகள்**

தரமற்ற செய்தித் தொடர்புகள் தவறான விளக்கங்களையும், தடைகளையும் ஏற்படுத்துவதனால் முரண்பாடுகள் தோன்றுகின்றன.

**வரையறுக்கப்பட்ட வளங்கள்**

வளங்கள் வரையறுக்கப்ட்ட நிலையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

**அதிகரித்த சிறப்புத்தேர்ச்சியும் பகுதியாக்கலும்**

நிறுவன செயற்பாட்டின் விருத்திக்காக உருவாக்கப்படும் பகுதிகள் தமது இலக்குகளில் அதிக கவனம் செலுத்தும்போது மற்றைய பகுதிகளுடன் ஒத்துப் போகாத நிலை ஏற்படும்போது முரண்பாடுகள் தோன்றுகின்றன.

நிறுவனமொன்றில் செயற்படும் ஊழியர்கள் இயற்கையான சுபாவம், நடத்தைக் கோலங்கள் புறக்காரணிகள் என்பவற்றின் தாக்கத்தினால் எழுகின்ற முரண்பாடுகளை பின்வருமாறு வகைப்படுத்தி விளங்கிக் கொள்ளமுடியும்.

நிறுவனங்களுக்கிடையிலான முரண்பாடு (Inter Organaizational -(Conflict)
திணைக்களங்களுக்கிடையிலான முரண்பாடு (inter Departmental (Conflict)
குழுக்களுக்கிடையிலான முரண்பாடு (inter Group Conflicts)
தனிநபர்களளுககிடையிலான முரண்பாடு (inter Personal Conflict)
பங்கு முரண்பாடு (Role Conflict) பங்கு முரண்பாடு என்பது பதவியில் உள்ள ஒருவரின் நடத்தை பற்றிய எதிர் பார்ப்புக்களின் தொகுதியாகிய பங்கில், அவரால் ஆற்றப்படும் செயற்பாடுகள் அல்லது நடத்தைகள் இசைவற்றுக் காணப்படும் போது ஏற்படும் முரண்பாட்டினைக் குறிக்கின்றது.

ஒருவர் குறிப்பிட்ட ஒரு தொகுதியினரின் எதிர்பார்ப்புக்களுடன் இணங்கி நடந்து கொள்ளும் போது, இன்னொரு தொகுதியினரின் எதிர்பார்க்கைகளுடன் இணங்குவது சாத்தியமற்றதாகிறது. இதனால் பங்கின் ஒவ்வாத்தன்மை காரணமாக முரண்பாடுக ஏற்படுகின்றன.

மேலும் முரண்பாடுகள் நிறுவனத்தில் சாதக பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றன. நிறுவனத்தில் காணப்படும் உச்ச முரண்பாடுகள் ஊழியர்களுக்கிடையே அதிக குழப்பத்தை ஏற்படுத்துவதுடன் நிறுவனத்தின் செயற்றினையும் பாதிக்கும் மேலும் முரண்பாட்டு நிலமைகள் மிகையான மன அழுத்தத்தை அல்லது உடல் அழுத்தத்தை ஏற்படுத்தலாம்.

எனினும் முரண்பாட்டை உரிய முறையில் முகாமை செய்யும் போது சாதகமான விளைவுகள் ஏற்படமுடியும். குழுக்களுக்கும் தனிநபர்களிற்கும் சுறுசுறுப்பூட்டுகின்ற ஒரு சக்தியாகவும் முரண்பாடு அமையும். மேலும் நிறுன வடிவமைப்பு, தொழிற்பாடு என்பவற்றின் முன்னேற்றத்திற்கும் தீர்மானமெடுத்தலுக்கும் உதவும். உரிய முறையில் அடையாளங் காணப்பட்டு கையாளப்படும் முரண்பாடானது நிறுவனம் அழிந்து போவதை தடுக்க உதவும். எனவே முரணபாட்டின் சாதக பாதக விளைவுகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

Positive Outcomes

சாதகமான விளைவுகள்

சிறந்த எண்ணங்கள் உருவாகும்.

ஊழியர் புதிய அணுகுமுறைகளைத் தேடுவதற்கு நிர்பந்திக்கப்படுவர்

நீண்டகாலப் பிரச்சினை வெளிக் கொணரப்பட்டு தீர்க்கப்படும்

தனிநபர்களின் நோக்குகள் தெளிவாக்கப்படும்.

வேலையில் விருப்பத்தையும் புதியவற்றை உருவாக்கும் ஆற்றலையும் தூண்டமுடியும்.

பாதகமான விளைவுகள் (Negative Out Comes)

சில ஊழியர்கள் தாம் தோற்கடிக்கப்படுவதாக அல்லது தாழ்த்தப்படுவதாக உணரலாம்.

ஊழியர்களுக்கிடையிலான இடைவெளி அதிகரித்தல்

எனவே ஒரு நிறுவனத்தில் எழும் முரண்பாடுகள் சாதக, பாதக விளைவுகளை கொண்டிருப்பதனால் சாதக விளைவை நோக்கிய முரண்பாடுகள் தூண்டப்படுதல் அவசியமானதாகும். இந்த வகையில் முரண்பாட்டை தூண்டுவதற்கு பின்வரும் நுட்பங்கள் பயன்படுத்தப்படலாம்.

செய்தித் தொடர்பினை பயன்படுத்துதல் : சந்தேகமான அல்லது பயமூட்டும் செய்திகள் மூலம் அல்லது மிகக் குறைந்த தகவல்களை வழங்குவதன் மூலம் தூண்டுதல்

- வெளியாட்களை நிறுவனத்திற்கு கொண்டு வருதல்
- நிறுவன அமைப்பை மாற்றுதல்
- போட்டியைத் தூண்டுதல்

**முடிவுரை**

நிறுவனங்களில் முரண்பாடுகள் தவிர்க்கப்பட முடியாதவையாகும். ஒரு முகாமையாளர் முரண்பாடுகளைக் கையாள்வதில் தமது நேரத்தில் 20% வரை செலவிடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. முகாமையின் அணுகுமுறைகள் முரண்பாட்டினால் நன்மைகளையும் பெற்றுக்கொடுக்கக்கூடியன. இந்த வகையில் பாடசாலைகளில் ஏற்படும் முரண்பாடுகள் சிறந்த முறையில் முகாமை செய்யப்படும்போது அவை செயலாக்கத்திற்கு வழிவகுப்பவையாக அமையும். எனவே முரண்பாடுகளை சரியாக விளங்கிக் கொள்வதும் அவற்றை உரியவாறு முகாமை செய்வதும் பாடசாலை முகாமையின் சிறந்த பணியாகும்.

உசாத்துணை நூல்கள்

1. Rabbins, Stephen.P.Organizaional Behaviour Concepts. Controversies. Applications. 7th Ed. Prentice -Have of india Private Limited, New Delhi, Feb.1996.
2. Middlemist, R.Dennis, Hitt, Michael. A Organizational Behaviour, Applied Concepts, Science Research Associates, U.S.A 1981
3. www.wikipedia.org.

# உலக தாய்மொழித் தினம்

**திருமதி. க. ஜெயராஜபாலா**

ஆண்டவன் படைப்பிலே உயர்ந்த பிறப்பு மானிடப்பிறப்பாகும். அந்த உயர்ந்த பிறப்பாகிய மானிடப் பிறப்பைப் பெற்றுக் கொண்ட மனிதன் தன் உணர்வுகளை, தன் உள்ளக் கிடக்கைகளை, தன் கருத்துக்களை மற்றவர்க்கு வெளிப்படுத்த மொழியை ஒரு கருவியாகப் பயன்படுத்தினான். மனிதன் தோன்றிய காலத்தில் செய்கை மூலமும் ஊமைப் பாஷை மூலமும் தன் கருத்துக்களை வெளிப்படுத்தினான். நாளடைவில் அவன் பேசுவதற்கு மொழி அவனுக்குக் கைகொடுத்தது. அவ்வாறு அவள் தன் கருத்துக்களை வெளிப்படுத்த பிறப்பிலிருந்து இறப்பு வரை பேசும் மொழியே தாய்மொழியாகும்.

1952 ஆம் ஆண்டு தங்கள் மொழியைக் காப்பாற்றுவதற்காக போராட்டத்தில் உயிர் நீத்தவங்க தேச மொழியுரிமைப் போராளிகளின் நினைவாகவும், அழிந்துவரும் மொழியைக் காப்பாற்றவும், ஐக்கிய நாடுகள் சபையின் சார்பாக ஆண்டு தோறும் பெப்ரவரி 21ம் திகதி தாய்மொழித் தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது.

சிந்தனை எனும் சிறப்பத்தைச் செதுக்க தாய் மொழி என்னும் உளியால் மட்டுமே முடியும். ஒருவருக்கு ஒருவர் தொடர்பை ஏற்படுத்த உதவிய மொழி தாய்மொழியாகும். பின்னாளில் இனத்தின் அடையாளமாக மாறியது. உலகளவில் மொழியானது நாட்டுக்கு நாடு, மாநிலத்திற்கு மாநிலம், சமூகத்திற்கு சமூகம், மாறுபடுகின்றது. உலகில் பேசப்படும் மொழிகள் பொதுமொழி, தாய்மொழி என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

மொழி என்பது வெறும் வார்த்தைகளால் மட்டும் ஆனது இல்லை. அதுவே நம் வாழ்க்கை' ஒரு இனத்தின் தனித்துவமான அடையாளம்' மொழியின்றி மனித குலத்திற்கு சிந்தனை கிடையாது, சிந்தனை இல்லாமல் மனிதன் இல்லை.

உலக அளவில் 10,000 ஆண்டுகளுக்கு முன் 7000 ஆக இருந்த மொழிகள் இன்று 3000இற்கும் குறைவாகக் குறைந்துள்ளதாக மொழியல் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்' இன்னும் பல்லாயிரக்கணக்கான மொழிகள் வார்த்தை வடிவம் பெறாமல் வெறும் பேச்சு மொழியாக மட்டுமே உள்ளன. வளமான மொழிகளிலேயே ஆயிரக்கணக்கான மொழிகள் இன்றும் கல்வி மொழியாக, ஊடகமொழியாக கணினி மொழியாக ஆக்கப்படவில்லை.

தற்போது பேச்சு வழக்கில் உள்ள சுமார் 7000 மொழிகளில் சரி பாதி அடுத்த இரண்டு, மூன்று தலைமுறைகளுக்குள்ளேயே காணாமல் போய்விடும் ஆபத்து உள்ளது. என மொழியியல் நிபுணர்கள் கவலைப்படுகின்றார்கள்.

உலகில் எந்த மொழியும் சாதாரணமாக உருவாவது இல்லை. ஒவ்வொரு மொழியும் பல நூற்றாண்டுகளாக மக்களின் வாழ்க்கையில் கலந்து அவர்களின் அனுபவங்களால் வார்த்தைகளைப் பெற்று இலக்கணங்களால் நேர்த்தி கொண்டு பாடல்களால் ஆராதிக்கப்பட்டு, இலக்கியங்களால் செழுமை சேர்க்கப்பட்டு, எந்த இனத்தின் பிரித்துப் பார்க்க முடியாத அங்கமாகிறது. அவற்றை நாம் கற்றுக்கொள்ளவும் அடுத்த தலைமுறைக்கு கற்றுத்தரவும் மொழியே கருவியாக உள்ளது.

தாய் மொழியைப் போற்றி வீழ்ந்த நாடும் இல்லை. தாய்மொழியைப புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை. தன் தாய்மொழியில் கல்வி கற்று உலக செல்வந்த நாடுகளில் முதல் பத்து இடத்தைப் பிடித்துள்ள நாடுகள்

அமெரிக்கா - ஆங்கிலம்

ஜேர்மனி - ஜேர்மன்
சைனா - மாண்டரின்
கட்டார் - அரபி
நார்வே - நார்வேஜியன்
தென்கொரியா - கொரியன்
லக்சம்பேர்க் - லக்சம் பேர்ஷ்
ஐக்கிய அரபு எயிமிரெட் - அரபிக்
குவைத் - அரபிக்

தன் தாய் மொழியை விட்டு பிற மொழி கற்ற நாடுகள் முதல் ஏழை நாடுகள் இதோ
கொங்கோ
ஜிம்பாப்வே
புருண்டி,
எரித்திரியா
மத்திய ஆபிரிக்கக் குடியரசு
நைஜீரியா

காலத்துக்கு ஏற்ப ஒரு மொழி தன்னைப் புதுப்பித்துக் கொண்டு வந்தால்தான் அதன் ஆயுள் தொடர்ந்து கொண்டே இருக்கும். அப்படி தன்னைப் புதுப்பித்துக் கொள்ளாத பல மொழிகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. உலகத்தில் வழக்கில் இருக்கும் அத்தனை மொழிகளுள் ஆறே மொழிகள் தான் உலகிற்கு நாகரிகம் சொல்லிக் கொடுத்தவை. இவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கிய வரலாறு உள்ளவை என ஆய்வாளர்கள நிரூபித்துள்ளார்கள்.

இந்த ஆறு மொழிகளுள் தமிழுக்கு தனி இடம் உண்டு. சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன், ஹீப்ரு, சீனம் ஆகியவை ஏனைய ஐந்து மொழிகளாகும் . இவற்றுள் தமிழ், சீனம் மட்டுமே நவீன அறிவியல் யுகத்திற்கு ஈடுகொடுத்து வளர்ந்த மொழிகளாகும். கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம் ஆகிய மூன்று செம்மொழிகள் வழக்கத்தில் இல்லை. ஹிப்ரு மொழியை வழக்கத்திற்குக் கொண்டு வர யூதர்கள் பெரு முயற்சி செய்து வருகின்றார்கள். இவற்றில் தமிழ் மொழி மட்டுமே மனித சிந்தனையாளர்களையும், நுண்ணிய ஆற்றல்களையும் கொண்ட மொழி என மொழியியல் தந்தை எயினோ கூறியிருக்கின்றார்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாகவே வளமான இலக்கியமும், வாழ்வியலும் கொண்ட தமிழ் மொழியை பேசுவதும், தமிழராக வாழ்வதும் நாம் செய்த பெரும் பேறு. தமிழர்களின் நவீன சிந்தனைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் காலத்துக்கேற்ற மாற்றங்களுடன் இளமையோடும் புதுமையோடும் விளங்குகின்றது நம் தாய் மொழியாகிய தமிழ்.

தமிழர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தாய் மொழியான தமிழை வளர்ப்பதற்கு பாடுபடவேண்டும். தற்கால இயந்திர வாழ்க்கைக்கு பழக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஓடிச்சென்று தொழில் தேடும் எம்மவர்கள் எமது மொழியை கவனத்தில் கொள்ளாது. அந்நிய நாடுகளுக்கேயுரிய மொழியினைப் பின்பற்றுகின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும். எங்கும் எமது தாய் மொழியான தமிழ்மொழி ஓங்கவேண்டும்.

ஆதி மொழியென பெருமை பெற்ற எம் தமிழ் மொழியினைப் பாதுகாப்பது எம் அனைவரினது பொறுப்பும் கடமையுமாகும்.

'தமிழுக்கு அமுதென்று பெயர், அந்த தமிழ்
இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'

# மனித வாழ்வில் அருகிவரும் விழுமியங்கள்

திருமதி.ச.நாகேஸ்வரன் (ஆசிரியை)

எப்படியும் வாழலாம் என்றின்றி இப்படித்தான் வாழ வேண்டும் எனக் குறிப்பிடுவதனையே விழுமியம் என்பர். ஆகவே மனித வாழ்வை மேம்படுத்தும் பண்புகள் அனைத்தும் விழுமியங்கள் ஆகும். எல்லாப் பிறப்பினுள்ளும் மானிடப் பிறப்பு ஒன்றே மாண்பு மிக்கது ஆறறிவு நிறையப் பெற்றவர்கள் மானிடர்கள். இந்த ஆறாம் அறிவானது சிந்தித்து துணிந்து செயலாற்றும் பகுத்தறிவு நன்று தீது, நீதி - அநீதி எனப்பகுத்தறியும் ஆற்றல் படைத்த இந்த மனிதன் மனிதனாக வாழ இந்துசமய விழுமியங்கள் துணை நிற்கின்றன

மனிதன் தன் கீழான சிந்தனைகளில் இருந்து விடுபட்டு நற்சிந்தனைகளில் ஆழ்ந்து வாழ எடுத்துக் கொள்ளும் பிரயத்தனமே சமயம் ஆகும். ஆகவே மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால் சமயம் அவசியம். சுவாமி விவேகானந்தர் சமயத்தை சமுதாயத்தில் இருந்து எடுத்துவிட்டால் மிஞ்சுவது காட்டுமிராண்டிகளின் கூட்டமும் இவ்வகையில் சிறப்புற்று விளங்கும் இந்து சமயத்தின் பால் நிறைவான பல விழுமியக்கருத்துக்கள் காலம் காலமாக பகிரப்பட்டு வந்துள்ளன.

உண்மையில் மனிதப் பண்புகள், மனிதவிழுமியங்கள் மனித மேம்பாடுகள் என்பவற்றை அனுசரிக்கும் போது அங்கு ஆத்மீகம் மிளிர்கின்றது, பிறஉயிர்கள் மீது அன்புகாட்டுதல், சேவைசெய்தல், உண்மை பேசுதல், நேர்மையாக நடத்தல், பிறர்நலம் பேணுதல்' இன்னா செய்யாமை, நல்லொழுக்கம், சட்டங்களை மதித்தல் சூழலை மாசடையாது பேணுதல், நடுவுநிலைமை போன்றயாவும் மனித விழுமியங்களே.

முற்காலத்தில் வாழ்ந்தமக்கள் சமயவிழுமியங்களை செம்மையாக கடைப்பிடித்தார்கள் இதனால் அவர்கள் வாழ்வில் உயர்வு பெற்று தமது இலக்கை அடைந்தார்கள். ஆனால் இன்று நவீன உலகத்திற்கும் மதமாற்றத்திற்கும் இடையில் வாழ்ந்து வருகின்ற இளம் சமூதாயத்தினரை இவ் விழுமியபண்புகளை கடைப்பிடிக்கச் செய்து நற்பண்புள்ளவர்களாக வேண்டிய தேவை உள்ளது.

ஒரு இந்துவிற்கு உயர் வாழ்க்கைத்தரம் எப்போது ஏற்படுகின்றதென நோக்கும் போது ஒழுகுவதால் மனிதவாழ்க்கைத்தரம் சீரும் செம்மையும் பெறுகிறது. ஆனால் இன்று பொருளாதாரரீதியிலோ சமூகரீதிலோ மனிதர்களின் வாழ்க்கை தரம் கணிக்கப்படுகின்ற நிலமைமை தான் பொதுவாகக் காண்கின்றோம். இவ்வாறான போலி வேடங்களைக் களைதல் வேண்டும்

உள்ளுவதெல்லாம் உயர்வல்லல் என்று வள்ளுவர் கூறும் போது அவர் கருத்திற் கொண்டது உயர்வான எண்ணங்களையே. உயர்வான எண்ணங்கள் எப்போதும் மனிதவிழுமியங்கள் சார்ந்தனவாகவும், அவற்றைத் தழுவியதாகவும் அமையும். உதாரணமாக பகவான் இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், மகாத்மாகாந்தி போன்றவர்கள் மாந்தர்களுள் மாணிக்கங்களாக மகாத்மாக்களாக போற்றப்படுகின்றார்கள. இவர்கள் இவ்வாறு போற்றப்படக் காரணம் அவர்கள் தமக்கென வாழாது பிறர்க்குரியவராக வாழ்ந்தனர். எல்லோரும் வாழ வேண்டும், இன்புற்றிருக்க வேண்டும், நல்லோர்கள் ஆக வேண்டும் என பிறர் நலனோம்பி வாழ்ந்தனர். இதனால் அவர்களுடைய வாழ்வு கலங்கரை விளக்கமாக திகழ்ந்தது

சத்தியம் என்னும் விழுமியம் எல்லா விழுமியங்களிற்கும் அடிப்படையானது, சத்தியம் நித்தியமானது, மாறும் தன்மை அற்றது. எவனொருவன் சத்தியத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றானோ அவன் மனிதருள் மாணிக்கமாகிவிடுகின்றான் அரிச்சந்திரன் முதல் மகாத்மகா காந்திவரை சத்தியத்தை ஓம்பியவர்கள் என படித்திருக்கின்றோம். ஆயினும் அத்தகைய ஒளி விளக்குகளையும் வழிகாட்டல்களையும் பின்பற்றி எமது வாழ்க்கைப்படகுகளை இருட்டில் நின்று தத்தளிக்காது கரையேற்ற முயல்பவர்கள் எத்தனைபேர்? சரி எது? பொய் எது? நல்லது எது கெட்டது எது? என்ற சிந்தனைகள் பேச்சுக்கள், செயல்கள் ஆகியவற்றை இனங்கண்டு தரம்பிரித்து அறிவதற்கு ஒவ்வொரு கணமும் மனிதனது மனசாட்சி கூறிக் கொண்டே இருக்கிறது.

இதனைக் கேட்டு ஒழுகுபவர்கள் தான் எத்தனை பேர்? ஆகவே சத்தியத்தின் மூலம் மனித வாழ்வினை செம்மையும், சீரும் செழுமையும், இனிமையும் நிறைந்ததாக ஆக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனது கடமையாகும்.

இன் சொல் பேசுதல் எனும் விழுமியப் பண்பை நோக்குவோமாயின் பிறர் மனம் புண்படக் கூடியவாறு இன்னாத பேச்சுக்களை பிரயோகித்தலை தடுத்தல் வேண்டும். குறிப்பாக தகாத வார்த்தைகளை பயன்படுத்தல், பிறரை ஆத்திரமூட்டுதல், போகவிட்டு புறங்கூறல், பொய்யுரைத்தல், சூழுரைத்தல், தூற்றுதல், இகழ்தல், நிந்தித்தல் போன்றவை பேச்சினால் ஏற்படுவன தீயினால் ஏற்பட்ட புண்கள் காலப்போக்கில் ஆறிவிடும் ஆனால் வாயினால் சுட்ட புண்என்றுமே ஆறாது இதனையே வள்ளுவப் பொருத்தகையும்

"தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே"

நாவினாற் சுட்டவடு' என்ற குறட்பா மூலம் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார் இதுமட்டுமன்றி இனிய இனிய சொற்கள் அன்பும் ஆதரவும் நிறைந்த வார்த்தைகள் நிறைய இருக்க இன்னாத சொற்களை பேசுவது இனிய கனியை உண்ணாது இனிமையற்ற காயை உண்பதற்கு ஒப்பாகும். பகைவர்களைக் கூட இனிய சொல்லால் வெற்றிகொள்ளலாம். மேற்போந்த அடிகள் மூலமும் இனிய சொற்களை பேசுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர்.

மன அடக்கம் எனும் விழுமிய பண்பும் முக்கிய இடத்தைப்பெறுகின்றது. மனிதன் தனது எண்ணங்களைத் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதாகும். அதாவது புலன்கள் பொறிகள் கருவிகளை அந்தந்த இடங்களில் வைத்து உரிய முறையில் கடடுப்படுத்தி பரிபாலனம் செய்ய வேண்டியது மனிதனின் பொறுப்பு மனக்கட்டுப்பாடு தரும் பெரும் விளைச்சல்தான்மன அமைதி மனச்சாந்தி மனத்தூய்மை ஆகும். மனஅமைதி பெற்ற மனிதன் தானும். நல்லபடி வாழ்கிறான். ஏனையோரையும் வாழ விடுகின்றான். எல்லோருடைய அன்பையும் ஆதரவையும் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெற்றுக் கொள்கிறான். ஆகவே மனக்கட்டுப்பாடு எனும் விழுமியம் இளம் சமுதாயத்தினருக்கு மிகவும் அவசியம் சக்தியும் ஆற்றலும் நிறைந்தது மனிதனின் இளமைப்பருவம் வேகமும் வேட்கையும் அலைமோதும் காலமும் அதுவே இக்காலத்தில் மனக்கட்டுப்பாட்டுடன் இருந்து விட்டால் மனிதனின் முன்னேற்றம் உயர்வு மகிழ்ச்சி என்பன உறுதியாகிவிடும்

ஆகவே இம்மனக் கட்டுப்பாட்டினூடாக சுயகட்டுப்பாட்டினை இளமையிலே வளர்த்து வருவோமேயானால் அதற்கு ஈடு இணையாக வேறெதுவும் இருக்கமாட்டாது. பயத்தினால் புற அழுத்தங்களினால் ஏற்படுத்தப்படும் கட்டுப்பாடு போலிக் கட்டுப்பாடாக அமைந்து விடுகின்றது. பெற்றோர்கள் ஆசிரியர்களின் தண்டனைக்கு அஞ்சி அவர்கள் முன் ஒழுங்காகவும் அவர்கள் இல்லாத விடத்து வேறு விதமாகவும் நடந்து விடுகிறது

இதனால் தான் சுயகட்டுப்பாடு வலியுறுத்தப்படுகின்றது.


பெரியோரைக் கனம் பண்ணுதல் எனும் விழுமியப்பண்பும் மனிதர்களிடையே அருகி வருவதை காணக்கூடியதாகவுள்ளது. பெற்றோர், குரு வயதில் மூத்தோர் முதலானோர் பெரியோர் ஆவர் அவர்களின் சொல்கேட்டு அவர்களுக்கு மதிப்பளித்து வாழப்பழகுதல் வேண்டும் வீட்டிற்கு வரும் பெரியவர்களை முகமலர்ச்சியோடு வரவேற்றல் இனிய சொற்களை பேசுதல், பண்டிகைகள் விழாக் காலங்களில் அவர்களின் ஆசியை பெறுதல் பயணஞ் செய்யும் போது பெரியவர்கள் வயதானவர்கள் வந்தால் எழுந்து அவர்களுக்கு ஆசனத்தைக் கொடுத்தல் போன்ற பண்புகளை சிறுவயதில் இருந்தே வளர்த்துக் கொள்ள வழிப்படுத்த வேண்டும்.

மேற்கூறப்பட்ட விழுமியப் பண்புகள் யாவையும் நோக்குமிடத்து மனிதரைடையே எண்ணம் சொல் செயல் ஆகியவற்றிற்கிடையே ஒருமைப்பாடு இருத்தல் அவசியம் ஒன்றை நினைத்து இன்னொன்றைப் பேசி பிறிதொன்றைச் செய்வது என்ற நிலைப்பாடு மனிதர்களிடையே பரவலாக காணப்படுகின்றது. இன்று உலகில் காணப்படும் துன்ப துயரங்களுக் கெல்லாம் இத்தகைய பாசாங்குகள் கபடத்தன்மைகள் ஏமாற்றுக்கள் என்பன வாழ்க்கையில் பலதரப்பினரிடம் இடம் பெற்றிருத்தலே காரணமாகும்.

மனித தர்மத்திற்கும் மனித விழுமிங்களுக்கும் உடன்பாடற்ற இவைகள் அறவே தவிர்க்கப்பட வேண்டியவையாகும்.

ஆகவே மேற்போந்த விழுமியப் பண்புகள் இன்று மனிதர்களிடையே மிகமிக அருகிவருவதையும் சுயநல வேட்கையும் அதிகரித்து வருவதை காணக்கூடியதாகவுள்ளது, இவற்றில் இருந்து விடுபட்டு மானிடப்பண்புகளை இளம்பராயத்திலிருந்தே மாணவப்பருவத்தினருக்கு பாடசாலைகள் ஆலயம்கள், அறநெறிப் பாடசாலைகள், பெற்றோர்கள் பெரியோர்கள் மூலம் சரியான முறையில் பின்பற்ற வழிவகுப்பதுடன் அவற்றை பின்பற்றாதவிடத்து ஏற்படும் விளைவுகளைக் கூறி அவர்களது நடத்தைகளை உன்னிப்பாக அவதானித்து தவறு விடும் பட்சத்தில் அன்போடு அரவணைத்து அவர்களை வழிப்படுத்த வேண்டியது ஒவ்வொரு கல்விமான்களது கடமையாகும்.

********



# தகவல் தொழில் நுட்பமும் நூலகப் பயன்பாடும்

திருமதி. ம. இராஜேஸ்வரன்

இன்றைய நவீன உலகிலே பன்மைச் சமூகப் பிரவாகத்தினுள் நுழைவதற்காக சமூகமானது எப்பொழுதும் மாற்றமுறும் செயற்பாடுகளிற்கு முகங்கொடுத்து வாழ வேண்டிய இன்றியமையாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. இதற்கு ஏற்றால் போல் அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்து வெற்றிகரமான செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டிய கடமையானது எம்முன்னே காத்திருக்கின்றது.

ஆதிகாலத்திலிருந்தே மனிதன் தரவுகளைத் தயார் செய்து தகவல்களைப் பெறுவதையும் பரிமாறிக் கொள்வதையும் செய்து வந்தான். அதன்போது பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டி நேரிட்ட காலத்திலிருந்து முன்னேற தொடங்கிய தகவல் பரிமாற்றத் தொடர்பானது இன்று பல்வேறு விதமாக வளர்ச்சியுற்று வருகின்றது. ஒரு கணனியிலிருந்து இன்னொரு கணனிக்கு தரவுகளை அனுப்பவேண்டிய தேவை 1960ம் ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்பட்டது. இந்தக்காலத்தில் தொலைபேசி முறைமையும் செய்மதி முறைமையும் ஒலியைப் பரிமாறிக் கொள்ளும் தொழில் நுட்பமும் விருத்தியடைந்து இருந்ததால் கணனியையும் தொடர்பாடல் ஊடகங்களையும் இணைக்கும் சிந்தனை ஏற்பட்டது. இதனால் 1970ம் ஆண்டுக்காலப்பகுதியின் இறுதியில் கணனித் தொழில்நுட்பமும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் ஒன்றுடனொன்று கைகோர்த்துக் கொண்டன. இத்தொழில்நுட்பவிருத்தி குறுகிய காலத்தில் ஏதேச்சையாக நிகழ்ந்ததொன்றல்ல. இது 60 வருடங்களுக்கு மேலாக ஏராளமான விஞ்ஞானிகளின் இடையறா ஆய்வு முயற்சியின் பெறுபேறாக கணனித் தொழில்நுட்பம், தொடர்பாடல் தொழில் நுட்பம், பல்லூடகத் தொழில்நுட்பம், இணையம், உலகலாவிய வலையமைப்பு வசதிகள் என்பன உருவாகின. தகவல் தொழில்நுட்பமானது இன்றைய உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் பொருளாதார கொள்கைகளுக்கு வலுவூட்டும் ஒரு வினைத்திறனான அம்சமாக விளங்குகின்றது.

தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக அனைத்துத் துறைகளிலும் செல்வாக்கு செலுத்தத் தொடங்கியிருக்கின்ற மாற்றமானது கல்வித் துறையிலே புத்தகங்கள் ஊடாக வேண்டிய தகவல்களைச் சேகரித்த காலம் போய் படிப்படியாக ஒரு இடத்திலிருந்து முழு உலகையும் ஒன்றிணைப்பதற்கான தொடர்பாடல் தொழில்நுட்பம் உருவாகியுள்ளது. வகுப்பறையில் பல்வேறு விதமான கல்விகளைப் பெறக் கூடிய வசதிகள், ஓர் இடத்திலிருந்தே தேவையான நேரத்தில் கல்வியைப் பெறக்கூடிய வசதிகள், இ.தக்சலாவ (www.e.thaksalawa) அறிவகம், வலைப்பாடசாலை (www.edulanka.lk) விது மங்பெத (www.Vidumanpethe.com) போன்ற வலைத்தளங்கள் கல்வியை மேம்படுத்த உதவி புரிகின்றன. சுகாதாரத் துறையிலே தொழில் நுட்பமானது மருத்துவப் பரிசோதனைக்காகப் பல்வேறுபட்ட நவீன மருத்துவ சாதனப்பொறிகளை உருவாகியதுடன், தொலை மருத்துவம் (Tele Medicine) தொலை சிகிச்சைப் பிரிவு (Remote Clinica Care) தொலை அறுவைச் சிகிச்சை, தொலை மருத்துவ அறிவுறுத்தல் என துரிதமாக சுகாதாரத்துறையிலே தொழில் நுட்ப மாற்றமானது வளர்ச்சியடைந்து வருகின்றது. விவசாயத் தொழிலும் நவீன புரட்சியினை ஏற்படுத்தியதோடு, விலங்கு வளர்ப்பு, மீன்பிடித் தொழிலும் தொழில் நுட்பமாற்றங்களுக்குட்பட்டது. வானிலைகளை துல்லியமாக அளவிடும் பொறிகள், வண்டுக்கட்டுப்பாட்டுப் பொறிகள், சொட்டுமுறை நீர் வழங்கல் (Drip Irrigation), ரோபோத் தொழில்நுட்பம் மூலம் செடிகளை நடுதல்,

அறுவடை செய்தல் பச்சையில்லம் (Green House) போன்றவற்றின் மூலம் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. போக்குவரத்துத்துறையிலும் வீதி நெரிசல்களைத் தவிர்ப்பதற்காக தன்னியக்க கட்டுப்பாட்டு தொகுதிகள் (CCTV) மின்சமிக்ஞை விளக்குகள் (Traffic light control System) அடையாளக் குறியீட்டு முறை, நிகழ்நிலை ஆசனப் பதிவுகள் (Online site Booking) நவீன சாதனங்கள், கட்டுப்படுத்தும் கருவிகள் என போக்குவரத்து துறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. கைத்தொழில் துறையிலே 24 மணித்தியால சேவை, களைப்படையாமல் வேலை செய்தல், செம்மை, தூய்மை என்பவற்றுக்காக றோபோ பொறிகள் பயன்படுத்தப்படுகின்றன. விரல் அடையாள அலகிடலி, (Finger print Scanner) அட்டை வாசிப்பான் (Card Reader) மின் வங்கியியல் தொகுதி (e.banking system) இலத்திரனியல் வணிகம் (e.commerce) நிகழ்கால அங்காடி கொள்வனவு (online shopping) என வியாபாரத்துறை விரிவாக்கப்பட்டுள்ளது. மேலும் அரசாங்கத்துறையானது தொழில் நுட்பவியலை பயன்படுத்தி நாட்டின் மக்களுக்கு தேவையான அரச மையங்கள் மின் அரசாங்க நடவடிக்கைகள் (e.Govrnment) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையம் (ICTA) என்ற வலைப்பக்கங்கள் மூலமாக பங்களிப்பு செய்து வருகின்றன.

இவ்வாறாக பல்வேறு துறைகளிலும் தகவல் தொழில்நுட்பமானது பொருளாதாரக் கொள்கைகளுக்கு வலுவூட்டும் ஒரு வினைத்திறனான அம்சமாக விளங்கி வருகின்றது. இதன் காரணமாக ஒவ்வொரு மாணவனும் ஆரம்பக் கல்வி தொட்டே கணனி மென்பொருள் மற்றும் கணனி வலையமைப்பு தொடர்பான சூழலுக்குப் பரிச்சயமாக வேண்டிய சூழல் விதந்துரைக்கப்பட்டு வருகின்றது. இக்கல்வி முறையானது கணனி அடிப்படையிலான கல்வி இணைய வழிப்பயிற்சி, தகவல் தொடர்பாடல் சாதனம் மூலமான தொடர்பாடல் என விரிவாக்கம் அடைந்து செல்கின்றது. இன்று நாம் விஞ்ஞான பூர்வ யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எதனையும் அலசி ஆராய்ந்து தர்க்க ரீதியாக நோக்கும் சமுதாய எழுச்சி ஏற்பட்டு வருகின்றது. இந்நிலையில் நூலகப்பயன்பாடு என்பது தேவையான தரவுகளைப் பெற்றுக்கொள்ளுதல், பல்வேறுபட்ட நூல்கள் நூலகத்தில் காணப்படுவதனால் ஒப்பிட்டு ஆராய்வதற்கு உதவுதல், நூலகத்தின் மூலம் வெளிக்கள ஆய்வு என்பது முக்கியமற்றதாகின்ற நிலைமை போன்றவற்றை தோற்றுவிக்கின்றது. இதன்மூலம் மாணவர்களிற்கான நூலகப் பயன்பாடு என்பது பொறுப்புணர்ச்சியுள்ள மாணவர் சமுதாயத்தினை உருவாக்க உதவுகின்றது எனக் கூறப்படுகின்றது. இதற்காக பாடசாலை நூலகம் கற்றலுக்கான சேவைகள், நூல்கள், மற்றும் வளங்களை வழங்குகின்றது. இவை "யுனஸ்கோ" வின் பொது நூலக அறிக்கையில், 'நெறி முறைகளுக்கேற்ப பரந்துபட்ட நூலக மற்றும் தகவல் வலைப்பின்னலின் துணையுடன், பாடசாலை சமூகத்தின் சகல உறுப்பினர்களையும், தர்க்கரீதியான சிந்தனையாளர்களாகவும், பல வடிவங்கள் ஊடகங்களில் வரும் தகவல்களைப் பயிற்று முறையில் பயன்படுத்துபவர்களாகவும் உருவாக்குகின்றன." எனக் கூறப்படுகின்றது.

நூலகங்களும், ஆசிரியர்களும் ஒருமித்து செயற்படும் போது மாணவர்கள் எழுத்தறிவு, வாசிப்புத்திறன், கற்றல், பிரச்சினை தீர்த்தல், தகவலறிதல், மற்றும் தொடர்பாடல் திறன்கள் என்பவற்றில் உயர்வான தேர்வினைப் பெற்றுக்கொள்கிறார்கள் என ஆய்வுகள் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. பாடசாலை நூலகங்கள் வயது, இனம், பால், சமயம், மொழி, தொழில் சார் அல்லது சமூக நிலைமை என்ற பாகுபாடுகளின்றி பாடசாலைச் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சமத்துவமாக பாடசாலை நூலகச் சேவைகள் வழங்கப்படல் வேண்டும். பாடசாலை நூலகமானது எழுத்தறிவு, தகவலறிவு, கற்பித்தல் கற்றல் மற்றும் பண்பாடு முதலியவற்றை வளர்க்கவும் அவற்றின்

குறிக்கோள்களை வெற்றிகரமாக அடைந்து கொள்ளவும் துணை புரிவதாகக் காணப்படவேண்டும். அதாவது பாடசாலையின் கலைத்திட்டம், நோக்கம் என்பவற்றின் இலக்குகளை அடைய உதவுதலும் வழிப்படுத்தலும், நூலகத்தினைப் பயன்படுத்தும் பழக்கவழக்கங்களை மேம்பாடடையச் செய்தல், சிறுவர்கள் கதைமலர்களை வாசித்து இன்புற்று மகிழச்செய்தல், மாணவர்கள் தேவையான ஆக்கங்களைத் தயாரிக்கும் போது பட்டறிவைப் பெற்று, தெளிவடைவதற்கான அமைப்புத் தகவல்களைப் பெற்று பயன்படுத்திக் கொள்ளும் திறனை வளர்ப்பதற்கும் நூலகங்கள் உதவுகின்றன. அத்தோடு சமூகமயமாக்கலுக்குத் தேவையான நுண்ணறிவு பூர்வமான தொடர்புமுறைகளை அறிந்து கொள்ள தகவல்களை வழங்குகின்றது. மேலும் மாறுபட்ட சிந்தனைகளையும், கருத்துக்களையும் உலகலாவிய ரீதியில் பெற்றுக்கொள்வதற்கு உதவுகின்றது. அவை மட்டுமல்லாமல் சமூகத்தில் சிறந்த பிரஜையாக வாழத்தேவையான கருத்துக்களையும் அறிவார்ந்த தகவல்களையும் வாய்ப்புக்களையும் வழங்குகின்றது. இதன்மூலம் சமூகத்தினரை வாசித்தலின் மூலம் பூரணத்துவடையச் செய்கின்றது.

இத்தகைய நூலகப் பயன்பாட்டின் விளைவுகளை மேலும் விருத்தியாக்க செய்யும் வகையில் இன்றைய காலத்தில் நூலகப் பயன்பாட்டில் தகவல் தொழில் நுட்பமானது பங்களிப்பு ஆற்றி வருகின்றமை குறிப்பிட்டுக்கூறக்கூடிய ஒரு விடயமாகின்றது. பெருகிக்கொண்டு வரும் வலைப்பின்னல் சுற்றுச்சூழலில் பாடசாலை நூலகங்கள் பல்தரப்பட்ட தகவல் கையாளல் திறன்களைத் திட்டமிடுவதிலும் அவற்றை ஆசிரிய மாணவர்களுக்கும் கற்பதில் ஊக்கமுடையவர்களாகச் செயற்பட வேண்டிய நிலைமை உருவாக்கியுள்ளது. உலகம் இன்று அதிவேகமான மாற்றங்களுக்கு உள்ளாகின்றது. இன்று புத்தம் புதியதாய் தோன்றும் விடயங்கள் பழங்கதைகளாய் போய்விட சில மாதங்களோ சில நாட்களோ கூட போதுமானவையாகக் காணப்படுகின்ற நிலையில் மனித சமுதாயத்திற்கு தகவல் தொழில்நுட்ப துறையின் அசுர வளர்ச்சியும் அதன் விளைவான அறிவுப் பிரகாரமுமே அடிப்படைக் காரணங்களாக காணப்படுகின்றன. இந்நிலையில் மாற்றமுறுகின்ற வெள்ளத்தில் அள்ளுண்டு போகாமல் மாற்றங்களுக்கு ஏற்ப நம்மை மாற்றிக் கொள்ள நூலகமானது உதவி புரிகின்றது. இன்று நாம் வாழ்வது அறிவை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தில் ஆகும். அறிவைத் தேடுவதற்கான அவசியம். எப்போதுமில்லாதவாறு அதிகரித்துள்ளதை நாம் உணர்கின்றோம். அறிவைப் பெற்றுக்கொள்வது அறிவைத் தேடுவது அவ்வறிவு காணப்படும் இடத்தை அறிவது என்பன சமூக நெரிசலில், ஓரிடத்தில் நின்றுவிடாது முன்னோக்கிப் பயணிக்க சிறந்த வழியாக நூலகப் பயன்பாடு காணப்படுகின்றது. வெளிக்களத்தில் திரட்டமுடியாத வரலாற்றுப் பதிவுகள், வரலாற்றுக் காரணிகள் விடயம் பற்றிய தெளிவான அறிவு என்பவற்றை மாணவர்களிற்கு நுணுக்கமாகவும், தெளிவாகவும், தேவையான விபரங்களை தகுந்த முறையில் ஆராய்ந்து பாதுகாப்பதற்கும், பல்வேறுபட்ட நாடுகளின் தரவுகளை பெறுவதற்கும் தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அண்மைக்காலங்களில் தகவல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி நூலகங்கள் நன்கு வளர்ச்சியடைந்து வருகின்றன. தேவையான நூல்களைத் தேடுவதிலும், பெறுவதிலும் உள்ள நேர விரயம், சிரமம் ஆகியவற்றைக் குறைப்பதற்கு தொழில்நுட்பமானது பங்களிப்பு செய்கின்றது. அதுமட்டுமன்றி நூலகங்கள் பல தமது தரவுத்தளங்களை (Data base) இணையத்தள வலையமைப்பிலும், நூலகங்களுக்கிடையிலான வலையமைப்பிலும் இணைந்து வைக்கின்றன. இதன் மூலம் தேவைப்படும் நூல்கள் ஆய்வுகள் சஞ்சிகைகள், போன்ற சகலவற்றையும்

கணநேரத்தில் பெறமுடிவதுடன் நூலகத்திற்கு செல்லாமலே தமக்குத் தேவையானவற்றை வலையமைப்பின் ஊடாக இலக்கியத்தேடல் மேற்கொண்டு தேவையான தரவுகளைப் பெறக்கூடிய வசதிகள் ஏற்பட்டுள்ளதோடு இணையத்தளமும் நூலகம் போன்ற சேவையை ஆற்றி வருகின்றது. இதனால் தேவையான விடயங்களை ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள் காணப்படுகின்றன. இதனால் நூலகப்பயன்பாடு என்பது தவிர்க்கப்பட தேவையான இடத்திலிருந்து தரவு தகவல் பரிமாற்றம் இடம்பெறுகின்றது.

இன்றைய காலத்தில் பாடசாலைகளில் மாணவர்கள் தமது கற்றலுக்குத் தேவையான, கலைத்திட்ட மேம்பாட்டிற்காகக் கூட நூலக நூல்களைக் கையாள்வதை தவிர்த்துக் கொள்கின்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. தமக்குத் தேவையான தகவல்களை வாசித்துக் கிரகித்துப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக இணையத்தளம் மூலமும் ஏனைய ஒளி ஒலிச்சாதனங்கள் மூலமாகவும் மேலோட்டமாக அறிந்துகொள்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. தேவையற்ற விடயங்களை அதிகளவில் அறிவதற்கு ஆர்வமாய் உள்ளபோதும் யதார்த நிலைமையினை பகுத்தறிகின்ற தன்மை குறைவாகக் காணப்படுகின்றது. நூலகத்தினைப் பயன்படுத்தி வாசித்தலின் மூலமும், கிரகித்தலின் மூலமும் அறிவைப் பெருக்கிய காலம் கடந்து மாணவர்களின் சிந்தனைகள், போக்குகள், நடவடிக்கைகள் அனைத்துச் செயற்பாடுகளிலும் தகவல் தொழில்நுட்பம், செல்வாக்குச் செலுத்துத்தொடங்கியுள்ளது. இணையத்தளங்களையும், கையடக்க தொலைபேசிகளையும் பயன்படுத்துவதில் காட்டும் ஆர்வமானது நூலகப் பயன்பாட்டில் காட்டுவதில்லை. சில வருடங்களிற்கு முன் மாணவர்களின் பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்றாகக் காணப்பட்ட புத்தகம் வாசித்தல், கதைப்புத்தகம் வாசித்தல் என்ற நிலைமையே அற்றுப்போய் அரிதாகக் காணப்படுகின்றது. பொழுதுபோக்கிற்காக தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி விளையாட்டுக்களை விளையாடுவதில் தமது நேரத்தைச் செலவிடுகின்றனர். இதனால் வாசிப்பு ஆற்றல் குறைவடைந்து செல்கின்றது. இதன் விளைவாக தற்போது வாசிப்புத்திறன் மேம்பாட்டிற்காக நூலக வாசிப்புப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

மேலும் மாணவர்கள் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்து கொண்டு செல்லும் அதேவேளை "கற்றலுக்காகக் கற்றல்" என்ற தேர்ச்சியினை அடைவதில் பின் நிற்கின்றனர். சமுதாயத்தில் தொழில்நுட்ப விருத்தியானது அறிவுப் பாதைக்கு வழிசமைப்பதாக இருப்பதோடு மட்டுமல்லாமல், அழிவுப் பாதைக்கும் இட்டுச் செல்வதான சில செயற்பாடுகளும் காணப்படுகின்றன. பல்வேறு விதமான நூலக வசதிகள் கொண்ட நூலகங்களைப் பயன்படுத்தி வெவ்வேறு விதமான நாட்டு நூலகங்களுடன் இணைந்து செயற்படுவதற்கான வசதி வாய்ப்புக்கள் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளன போதும் அதனை சாதகமான முறையில் தேவையின் நிமித்தம் பயன்படுத்துபவர்களாக ஒரு சில பகுதியினர் காணப்படுகின்றனர். அதன்மூலம் அவர்கள் தொழில்நுட்ப மாற்றங்களை பிரயோகித்து முன்னேறிக்கொண்டு செல்ல இன்னோர் பக்கத்தில் நூலகமும் நூலகப் பயன்பாடும், வாசிப்புத்திறன் என்பன குறைவடைந்து செல்வதினை அவதானிக்க முடிகின்றது.

உசாத்துணை
1. கூர்மதி 2004
2. அகவிழி 2008
3. சிறுவர் கலைக்களஞ்சியம் 2014

*****

# மானிடா, நில்! கவனி! முன்னேறு

ஆக்கம் : திருமதி. அ. ஜெ. அரஸ்டானியல்

சிந்திக்கும் திறனுடையவன் மனிதன் அச்சிந்தனையே ஏனைய உயிர்களிடத்திலிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுகின்றது. ஆக்கத்திற்கும், அபிவிருத்திக்கும் உதவ வேண்டிய அவனது சிந்தனைகள் உலகையே அழிவுக்கு இட்டுச் செல்லும் நிலைக்குத் தள்ளுகின்றது. இந்நிலையில் ஒவ்வொரு மனிதனுமே நான் கடந்து வந்த பாதையை திரும்பிப்பார்க்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளான். எனவே மானிடா சற்றுநில்! கவனி! முன்னேறு. உன் எதிர்காலம் ஒளிமயமாகும்.

"உன்னையே நீ அறிவாய்" எனும் தத்துவ மெய்யியலாளர்களின் அடிப்படைத் தத்துவத்திற்கு அமைய எம்மை நாமே சுயமதிப்பீட்டிற்கு உட்படுத்துவனூடாக பலம், பலவீனங்களை இனங்கண்டு வாழும்போது எமது வாழ்வு முன்னேற்றமடையும். நாம் கடந்து வந்த பாதை, எம் வாழ்வின் அனுபவப் பதிவேடுகள், முன்னேற்றத்திற்கான முதற்படிகள். எவன் ஒருவன் தான் கடந்து வந்த பாதையை சீர்தூக்கி பார்த்து சீர்செய்கின்றானோ அவனே வாழ்க்கைப் பயணத்தில் முன்னேற்றம் எனும் எல்லையை அடைந்து கொள்ள எத்தனிக்கின்றான். எம்மையே நாம் ஆய்வு செய்து கடந்த கால வாழ்வின் அனுபவ ஒளியில் பயணிக்கும் போது எம் சமூகம் வளர்ச்சிப் பாதையில் செல்லும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை எனவே,

மானிடா நில்! கவனி! முன்னேறு

இன்று எம் சமூகம் எங்கே செல்கின்றது? எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, தற்கொலை, வன்புணர்வு, பாலியல் வல்லுறவு, சிறுவர் துஷ்பிரயோகம் போதைப்பொருட்களின் பாவனை என சமூக அநீதிகள் தலைவிரித்து தாண்டவமாடுகின்றன. "மாதா, பிதா, குரு, தெய்வம்" எனும் வரிசையில் போற்றப்பட்ட உறவுகள் இன்று கேள்விக் குறிகளாகி விட்டன. வேலியே பயிரை மேய்ந்த கதையாக தாயே தன் குழந்தையை கொலை செய்து தூக்கி வீசும் நிலைகளும், கருக்கலைப்புக்களும், தந்தையே தன் மகளை சீர்குலைத்த செய்திகளும் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன. உறவாட வேண்டிய உறவுகள் இன்று உதறித் தள்ளப்படும் துர்ப்பாக்கிய நிலைக்கு காரணம் தான் என்ன? இச்சமூக நெறிபிறழ்வுகளை சீர் செய்வது எமது கடமையல்லவா? எனவே மானிடா சற்று நில்! கவனி! முன்னேறு.

எந்த உரு மனிதனும் முதலில் தன்னைத்தானே அன்பு செய்யப்பழகவேண்டும். தன்னை அன்பு செய்யும் ஒருவனே தன் அயலானை, சமூகத்தை தான் வாழும் நாட்டை அன்பு செய்ய முற்படுவான் எனவே தான் இயேசுவும் "உன்னைப் போல் உன் அயலானையும் நேசி" எனும் புதிய கட்டளையை எமக்கு விட்டுச் சென்றுள்ளார். சாதி, இன, மத, மொழி ரீதியான வேறுபாடுகளைக் களைந்து ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழ இவ் அன்பின் கட்டளை வலியுறுத்துகின்றது. இதனையே அனைத்து மதங்களும் வலியுறுத்தி நிற்கனின்றன. "அன்பே சிவம்", "அன்பே கடவுள்", அன்பே அனைத்திற்கும் ஊற்று. ஆனால், இவ் அன்பு எம் சமூகத்தில் வாழப்படுகின்றதா,?

மானிடா நில்! கவனி! முன்னேறு

பணம், பட்டம், படிப்பு, பதவி என தேடி ஓடும் மானிடா! சற்று சிந்தித்துத் தான் பாரடா. நானும், என்னைச் சார்ந்தவர்களும் மட்டும் வாழ்ந்தால் போதும் எனும்

சுயநலத்தோடு வாழ நினைப்பவனே கொலை, கொள்ளை, கடத்தல், போதைவஸ்து எனும் அழிவுப் பாதையை நோக்கி பயணித்து மற்றவர்களையும் அழிவுக்குள்ளாகின்றன். தன் சுய இன்பத்திற்கான பலமனித உயிர்கள் சிதைத்து சின்னாபின்னமாக்கப்படுகின்றன. மலர்ந்து மணம் வீச வேண்டிய மலர்கள் மொட்டுகளாகவே கருகி விடுகின்றன. இந்நிலைகளுக்கான காரணத்தை மானிடா நீ சிந்தித்தாயா! உறங்கும் மானிடமே நீ விழித்தெழு! நில்! கவனி! முன்னேறு உன் வாழ்வு ஒளிமயமாகும்.

அன்பற்ற நிலையே இச்சமூக நெறிபிறழ்வுகளுக்கெல்லாம் காரணமாக அமைகின்றன. மனிதனை விட ஐந்தறிவு படைத்த உயிரினங்கள் கூட தம் இனத்தை தாம் அன்பு செய்கின்றன. கூவியழைத்து கூடி உண்ணும் காக்கையாரும். தன் இரத்தத்தையே தன் குஞ்சுகளுக்கு உணவாக ஊட்டும் பெலிக்கான் பறவைகளும் எமக்கு நல்ல உதாரணங்கள். ஆனால் அன்பே உருவான இறைவனின் சாயலாக படைக்கப்பட்ட மானிடனோ அன்பின் மகத்துவத்தை உணர்ந்துவாழ மறந்துவிடுகின்றான். எனவே தான் திருவள்ளுவர் "அன்புடைமை" எனும் அதிகாரத்திலே அன்பின் மகத்துவத்தை எமக்குணர்த்தி நிற்கின்றார்.

"அன்பிலாரெல்லாம் தமக்குரியவர் - அன்புடையார்
என்புமுரியர் பிறர்க்கு"

எனும் குறளினூடாக அன்பு இல்லாதவர்கள் தமக்குரியவர்கள் ஆனால் அன்புடையவர்களோ என்பும் உரியர் பிறர்க்கு என அன்பின் செயற்பாட்டையும், வெளிப்பாட்டையும் தெளிவாக விளக்கி நிற்கின்றார்.

எனவே மானிடராகிய நாம் ஒவ்வொருவரும் எம்மை நாம் அன்பு செய்வது போல என் அயலானையும் அன்பு செய்து வாழ முற்படுவோம்.

சிறு பராயம் முதலே குழந்தைகளுக்கு தூய சிந்தனைகளும், நேர்மனப்பாங்கும் வளர்க்கப்படவேண்டும்.
கல்வியுடன் ஒழுக்கத்தைப் போதிக்கும் பள்ளிகளில் சமய, விழுமியக் கல்விகளுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும். சமூக மன்றங்களினால் எம் இளைஞர் சமூகம் அன்பிலும், பண்பிலும், நல்லொழுக்கத்திலும் வாழ பண்படுத்தப்பட வேண்டும்.

பெற்றோர் - பிள்ளைகள், ஆசிரியர் - மாணவர், முதலாளி - தொழிலாளி, அதிகாரி சக ஊழியர் எனும் அனைத்து தரப்பினரிடையேயும் அன்பு வாழப்படவேண்டும். அப்போது தான் எம்சமூகம் அன்பின் சமூகமாக பரிணமிக்கும்.

மனிதா நில்! உன்னையே நீ திரும்பிப்பார். எந்நிலையில் நீ உள்ளாய் என்பது உனக்குப் புரியும். அன்பு எனும் இடத்தில் உன்னை நிறுத்து உன் நிலை எனக்கு தெளிவாகும்.

அன்பு பொறுமையுள்ளது, நன்மை செய்யும்
பொறாமைப்படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது
இறுமாப்படையாது, இழிவானதைச் செய்யாது
தன்னலம் நாடாது, எரிச்சலுக்கு இடம் கொடாது
- தீங்கு நினைக்காது


அன்பு தீவினையில் மகிழ்வுறாது மாறாக உண்மையில் அது மகிழும்
அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்
அனைத்தையும் நம்பும்
அனைத்தையும் எதிர்நோக்கியிருக்கும்
அனைத்திலும் மனவுறுதியாயிருக்கும்.

(1கொரி 13:4-7) எனும் விவிலியப் பகுதியில் அன்பின் தன்மையை புனித பவுல் அடிகளார் சிறப்பாக வலியுறுத்துகின்றார்.

எனவே, அழிவில்லா அன்பினை நீயும் நானும் கண்டுணர்ந்து வாழ்வோமாயின் எம் நாடும், வீடும், எம் சமூகமும் அன்பின் தளங்களாக மிளிரும் கொலைகளும், கொள்ளைகளும், அநீதியும், அக்கிரமங்களும் அகன்று போகும். முன்னேற்றம் என்னும் வளர்ச்சிப் பாதை ஒளிமயமாகும். அன்பின் சமூகத்தை கட்டி யெழுப்ப நீயும் நானும் முயல்வோமாக. அன்பின் சமூகம் மானிடராகிய எம் கைகளிலேயே உள்ளது.

எனவே,

மானிடா நில்! கவனி! முன்னேறு
உன் வாழ்வு ஒளிமயமாகும் .



கல்விக்கண்காட்சி 2016



பரிசுத் தினம் 2015



# சிறுவர் அறிவு மேம்பாட்டில் சிறுவர் இலக்கியங்களின் பங்கு.

திருமதி.த.பேரின்பமூர்த்தி.

சிறுவர் இலக்கியங்கள் சிறுவர்களின் உள்ளத்தைக் கவர்ந்து அவர் தம் உள்ளத்திலே எளிதாகக் கருத்துக்களைப் புகுத்திவிடும் தன்மை வாய்ந்தவை. சங்க காலம் தொட்டு இக்காலம் வரை இவ் இலக்கியங்கள் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருகின்றன. சிறுவர் உள்ளம் எப்போதும் குதூகலத் தன்மையையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. சோர்வடைந்து களைத்துப் போய் இருந்தாலும் கதை, பாடல், விடுகதை என்றால் அவர்கள் உற்சாகத்தை எட்டிவிடுவார்கள். இவ்வகையில் சிறுவர் பாடல்கள், கதைகள், சிறுவர் நாவல்கள், சிறுவர் பத்திரிக்கைகள், சிறுவர் திரைப்படங்கள் என சிறுவர் இலக்கியங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன.

சிறுவர் இலக்கியங்களின் தோற்றத்திற்கு வித்திட்டவர்கள் பாட்டிமார்களும் அம்மாமார்களும் தான் என்றே கூற வேண்டும். சிறுவர்களோடு ஒட்டி உறவாடும் போதும், தூங்க வைக்கும் போதும், உணவூட்டும் போதும், ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவழிக்க வழிப்படுத்தும் போதும் பாட்டியும் அன்னையும் சிறுவர் இலக்கியங்களையே கையாண்டு வெற்றிகரமாக நெறிப்படுத்தியுள்ளனர்.

சிறுவர் இலக்கிய வரிசையிலே சிறுவர்களைப் பெரும்பாலும் கவர்ந்திழுக்க வல்லன சிறுவர் பாடல்களே எனலாம். "இசையால் வசமாகா இதயம் ஏது?.." என்று பாடியுள்ளார் கவிஞர். சிறுவர் பாடல்களிலுள்ள ஓசை நயம், எளிமையான சொற்கள், இனிமையான சந்தம் என்பன சிறுவர்கள் உள்ளத்தில் பசுமரத்தாணி போல பதிந்து விடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. சிறுவயதிலேயே பதித்துவிட நினைக்கும் ஒழுக்க விழுமியக் கருத்துக்களை ஓசைச் சிறப்புடைய பாடல்கள் மூலம் சிறுவர்களுக்கு எடுத்து இயம்பும் போது அவர்கள் அவ்வழியிலேயே வழிநடத்தப்படுகின்றனர்.

" ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகின்றார்" என்ற கவிஞர் நாமக்கல் புலவரின் பாடலினூடாக இன்றைய சிறுவரே நாளைய தலைவர்கள் என்றும் அதனால் அவர்கள் கல்வியிலே நாட்டம் காட்டி கல்வியறிவுடைய சமுதாயத்தை உருவாக்கத் தலைப்பட வேண்டும் என்பதை நாசூக்காக எடுத்துக் கூறுகின்றார். மனதைப் பண்படுத்தும் தன்மை வாய்ந்த சிறுவர் பாடல்கள் சிறுவர் மனதில் கல்வி கற்க வேண்டும் என்ற பண்பை விதைக்கத் தவறுவதில்லை.

வையகத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டுமாயின் இவ்வாறு தான் வாழ வேண்டும் என்ற நியதிகளை நறுக்கெனக் கூறி நிற்கும் ஔவையாரின் நீதி நூற் பாடல்கள் சிறுவர்களை வளப்படுத்துகின்றன. எவ்வாறு ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்பவற்றில் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

சிறுவர்கள் மத்தியில் வலிந்து விதைத்துவிட நினைக்கும் நற்பண்புகளைக் கூட விலங்குகள், பறவைகள் என்பவற்றை உதாரணங்காட்டி பாடல் வழியாக வலியுறுத்துகின்றனர் சிறுவர் இலக்கிய கர்த்தாக்கள்.

"எருதிடம் உழைப்பைக் கற்றுக்கொள்
எறும்பிடம் சேமிக்கக் கற்றுக்கொள்

• நரியிடம் தந்திரம் கற்றுக்கொள்

நாயிடம் நன்றியைக் கற்றுக்கொள்" என்ற கவிஞர் பல்லவன் அவர்களின் பாடல் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

விடுகதைகள் சிறுவர்களது மூளைக்கு வேலை கொடுத்து சிந்திக்கும் ஆற்றல், தர்க்கிக்கும் திறன், விடை சொல்லும் பாங்கு, பிரச்சினை தீர்க்கும் திறன் என்பனவற்றை வளர்த்து விடுகின்றன. விடுகதைகளோடு சிந்தனைப் புதிர்கள் கூட மூளை வளர்ச்சி நிலையை ஏற்படுத்தவல்லன என்றே கூறலாம். விடுகதையின் கருத்தாழத்தை நன்கு விளங்கி விடையளிக்கும் ஆற்றலானது கற்றலில் வினாக்களை விளங்கி விடையளிக்க வழிகாட்டுகின்றன. இத்தகைய விடுகதைகளின் முக்கியத்துவத்தை அறிந்த கல்விமான்கள் ஆரம்ப, இடைநிலைக் கல்வியில் விடுகதைகள், புதிர்கள் என்பனவற்றை இணைத்துள்ளமையைக் காணலாம். இவை சிந்தனைக் கிளர்வை ஏற்படுத்துவதுடன் மனதை ஒருநிலைப்படுத்தும் தன்மையையும் வளர்த்தது விடுகின்றன.

சிறுவர்களது ஆக்கத்திறனை வளர்த்து விடுவதில் பங்களிப்புச் செய்யவல்லன சிறுவர் கதைகள் ஆகும். கற்பனைத்திறன் சொற்களஞ்சிய விருத்தி, கதை சொல்லும் பாங்கு, மொழி நடையைக் கையாளும் திறன் போன்ற ஆற்றல்களை சிறுவர்கள் மத்தியில் வளர்ப்பதோடு எதிர்காலத்தில் சிறந்த படைப்பாளிகளையும் உருவாக்கிவிடுகின்றன. இவ்வகையில் தென்னாலி இராமன் கதைகள், பீரபால்கதைகள், மரியாதை இராமன் கதைகள், ஈசாப் கதைகள் போன்றன இன்றும் சிறந்து விளங்குகின்றன. கல்வி வரலாற்றில் பாடத்திட்டங்களில் சிறுவர் கதைகளை உட்புகுத்தியுள்ளமை சிறுவர் கதைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்கின்றன.

சிறுவர் இலக்கிய வரிசையில் பத்திரிகைகள் வாசிப்புப் பழக்கத்தை தூண்டுவதோடு மட்டுமல்லாது சிந்தனைத் திறன், படைப்பாக்கத்திறன், அறிவு மேம்பாடு என்பனவற்றை ஏற்படுத்தவல்லன. சிறுவர்களுக்கென தனியான பத்திரிகைகள் வெளிவருகின்றன. அதுமட்டுமன்றி வாரப்பத்திரிகை, தினசரிப் பத்திரிகை போன்றவற்றிலும் சிறுவர்களுக்கென தனியான ஓர் இடத்தை ஒதுக்கி சிறுவர்களின் ஆற்றலை வளர்க்கத் துணை செய்கின்றன. அவ்வாறே சிறுவர் திரைப்படங்கள் கூட சிறுவர்களுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்த தவறவில்லை எனலாம். காலத்துக்குக் காலம் நவாலியூர் சோமசுந்தரப்புலவர், மா.பீதாம்பரன், அழ.வள்ளியப்பா, க. வேந்தனார், மு.நல்லதம்பி, த.துரைசிங்கம், வாகரை வாணன், அம்பி, பேராசிரியர் ஏ.சோதி போன்ற குழந்தைக் கவிஞர்கள் தோன்றி சிறுவர் இலக்கியத்தை வளர்த்ததோடு சிறுவர்களுக்கென நல்ல அறிவுரைகளையும் வழங்கி வந்துள்ளனர். இன்றும் புகட்டுகின்றனர்.

இத்தகைய பயன்மிக்க சிறுவர் இலக்கியங்களை சிறுவர்கள் பயன்படுத்தி உச்சப்பயனை பெறும் வகையில் பாடசாலையிலும் வீடுகளிலும் வசதி அமைத்துக் கொடுக்க வேண்டும். பாடசாலை நூலகங்களில் உள்ள சிறுவர் இலக்கியங்களை சிறுவர் பயன்படுத்தத் தூண்ட வேண்டும். வீடுகளில் பெற்றோர்கள் இலக்கியங்களைப் பெற்றுத்தருவதோடு வாசிப்புப் பழக்கத்தையும் தூண்ட வேண்டும். அதாவது வாசிப்பதற்கென தாமும் நேரத்தை ஒதுக்க வேண்டும். இன்று பெரும்பாலான சிறுவர் தொழிநுட்ப சாதன பாவனைகளிலே தமது ஓய்வு நேரத்தை செலவழிக்கின்றனர். உலக மாறுதல்களை ஏற்று வாழ வேண்டியது அவசியம் தான் என்றாலும் எதையும் அளவோடு செய்வதே சாலச் சிறந்ததாகும். எதுஎப்படியாயினும் வாசிப்பே மனிதனைப் பூரணப்படுத்துகின்றது என்பதற்கிணங்க வாசிப்புப் பழக்கத்தை சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தி நாளைய அறிவார்ந்த சமுதாயமாக உருவாக்க இன்றே உறுதி பூணுவோம்.

*****

# ஆரோக்கிய வாழ்வும் நீண்ட ஆயுளும்

திருமதி. தே. தேவகுமார்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கிணங்க மானிடப் பிறவி எடுத்த எமக்கு எல்லாச் செல்வங்களிலும் பார்க்க நோயற்ற வாழ்வே மிகப்பெரிய செல்வமாகத் தோன்றுகின்றது. வாழ்க்கையைச் சுகமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்ந்து முடிக்கவேண்டிய கடமை எம் அனைவருக்கும் உண்டு. எல்லோருக்கும் என்றோ ஒருநாள் மரணம் நிச்சயமானது. ஒன்றரை நூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்த யாரும் இன்று உயிருடன் இல்லை இன்று இருப்பவர்கள் ஒன்றரை நூற்றாண்டுகாலத்துக்கு உயிருடன் இருக்கப் போவதும் இல்லை. இந்தக் குறுகிய இடைவெளியில் மனிதனின் வாழ்க்கை முற்றுப்பெற்று விட்டதாகக் கருதமுடியாது. அதன் பின்பும் அவன் நினைவுகளாய் சரித்திரமாய் காற்றாய் மண்ணாய் செடிகொடியாய் இங்குதான் இருக்கப் போகிறான். இந்தவகையிலே எமது இருப்பை உறுதியாக்க வாழும் காலத்தில் எமது உடலின் ஆரோக்கியம் பேணப்பட வேண்டும். சித்திரம் வரைவதற்கு சுவர் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். ஆரோக்கியமான சுவரில் வரையப்பட்ட சித்திரம் தான் காலம் கடந்தும் வாழும்.

நோயற்று வாழ்வது எப்படி? நோயுற்றும் சுகமாக வாழ்வது எப்படி? என்றெல்லாம் தெரிந்து வைத்திருப்பதும் ஒருகலை தான். கடுமையான நோயுற்ற நேரத்தில் பெரும்பாலான இழப்புக்கள் மனிதனின் கவனக்குறைவினாலும் போதிய மருத்துவஅறிவு இல்லாமையினாலுமே ஏற்படுகின்றன. நாம் மருத்துவ சம்பந்தமான தகவல்களை அறிவதில் அதிகம் ஆர்வம் காட்டவேண்டும் அதற்கமைய எமது வாழ்க்கையை மாற்றிக் கொள்ள முயல வேண்டும். எதனையும் வருமுன் காப்பதற்கு முயற்சிப்போம் அதனையும் மீறி வருபவை எமது கையில் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள முயலுவோம்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணணில் பிறக்கையிலே
அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே..."

என்ற அடிகள் மூலம் எல்லாக் குழந்தைகளும் நல்லவர்களாகத் தான் பிறக்கின்றார்கள் அவர்களை ஆரோக்கியமாகவும் நல்லபழக்கங்கள் உடையவர்களாகவும் மிளிர வைப்பது பெற்றோர்களுடைய பாரிய பொறுப்பும் கடமையும் ஆகும். எமது சிறார்களுக்கு ஆரோக்கிய வாழ்வு சம்பந்தமான அறிவைச் சிறுவயதிலேயே புகட்டுவோம். தினமும் உடற்பயிற்சி செய்யும் பழக்கத்தினையும் உடல் நிறையைப் பேணும் பழக்கத்தினையும் சொல்லிக் கொடுத்து அவற்றைப் பின்பற்ற வைப்பதும் பெற்றோர்களின் தலையாய கடமையாகும். இச் செயற்பாடுகள் அவர்களின் எதிர்கால வாழ்க்கை வசந்தமாக அமைவதற்கு உறுதியாகும். "நல்ல சிந்தனைகளை வளர்ப்போம். தீயபழக்கங்களை ஒழிப்போம்."

ஆரோக்கியம் என்பதன் கருத்து யாதெனில் உடல் உள சமூக ஆன்மீக நன்னிலையே ஆகும் உடற்றகைமையை பேணுவதற்கு செய்யப்பட வேண்டியவற்றைச் செய்ய முடியாது திணறுகின்றோம். எனினும் நவ நாகரீக உலகில் மின்சார இயந்திர இலத்திரனியல் பாவனையும் தொலைக்காட்சி கணனி போன்ற பல்லூடகப் பாவனையும் நம்மை ஓர் இடத்தில் தொடர்ந்து இருக்கச் செய்து விட்டது. இதனால் உடலுக்குப்

போதிய அப்பியாசம் கிடைக்கவில்லை. இது மட்டுமல்ல இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய செயற்கை உணவுகள் பானங்கள் அதிகளவு சீனி கொழுப்புணவுகள் உப்பு போன்ற உணவுகளை நாளாந்தம் உள்ளெடுப்பதால் முன்பு எப்போதும் இல்லாதளவில் உடற்பருமன் ஆண் பெண் வேறுபாடின்றி வாட்டி வதைக்கின்றது. இதனால் நீரழிவு, உயர்குருதியமுக்கம், இதயநோய்கள் புற்றுநோய்கள் போன்றவற்றுக்கு இலக்காகும் நிலை ஏற்படுகின்றது.

எமது முன்னோர்கள் மனித உடல் உழைப்பிலேயே தமது சீவியத்தை நடத்தினார்கள். கடின உழைப்பின் மூலம் வியர்வை சிந்தி தமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அதனால் அவர்கள் உண்ணும் உணவுக்கேற்ப உடல் உழைப்பு இருந்தது. உடல் பருமன் அடையாமல் இன்றும் ஆரோக்கியமாக வாழ்கின்றார்கள். அன்றாட வேலைகளும் கடமைகளும் கூட உடல் அப்பியாசத்தைக் கொடுத்தன. உதாரணமாக கிணற்றில் அள்ளிக் குளித்தல், தோட்டத்திற்கு நீர் இறைத்தல், மா இடித்தல், அரிசி குற்றுதல், முற்றம் கூட்டுதல் போன்றன உடலுக்கு பயிற்சியைக் கொடுத்தன. அதனால் அவர்கள் இன்றும் ஆரோக்கியமாக நோய்நொடியில்லாமல் நீண்டகாலமாக வாழ்கின்றார்கள். ஆனால் இன்றைய நாகரீக வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால் பல மணிநேரம் கணினிக்கு முன்னால் இருந்து வேலை செய்வதும் வாழ்கைச் செலவினத்தை ஈடுசெய்ய வேலை நேரத்தின் பின்னரும் வேலை பார்ப்பதும் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள போதிய கால அவகாசம் கிடைக்காமல் போகின்றது. இதனால் எமது நாற்பது வயதில் கிளினிக் கொப்பியுடன் வைத்தியர்களை தேடி அலைந்து கொண்டிருக்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் எமது உடல் நிறையைப் பேணுவதற்கு பின்பற்ற வேண்டிய விடயங்களாவன:

- ❖ உணவை எப்போதும் அளவாக உட்கொள்ளப் பழகிக் கொள்ளவோம்.
- ❖ கடலை, கௌப்பி போன்ற தானியங்கள் உண்பதை ஊக்குவிப்போம்.
- ❖ மரக்கறிகள், கீரைவகைகள், பழவகைகள் போன்றவற்றை அதிகளவில் உண்ணப் பழகுவோம்.
- ❖ நாளாந்த வேலைகளை நாமே செய்யப் பழகுவோம்.
- ❖ அண்மையில் உள்ள இடங்களுக்கு நடந்தே செல்வோம்.
- ❖ இனிப்புவகைகள், சொக்லேட்வகைகள் போன்றவற்றை பிள்ளைகளுக்கு அதிகளவில் வழங்குவதைத் தவிர்ப்போம்.
- ❖ எண்ணெயில் பொரித்த உணவுகள் கொழுப்புணவுகள் போன்றவற்றை அதிகளவில் பயன்படுத்துவதை தவிர்ப்போம்.
- ❖ நீண்ட நேரம் தொலைக்காட்சிபார்ப்பது கணினி முன் இருப்பதை இயன்றவரை குறைப்போம்.

இத்தகைய நற்பழக்கங்களைப் பின்பற்றி உடல்நலத்தைப் பேணுவோம். ஒருவனுடைய உடலின் வெளித்தோற்றத்தைக் கொண்டு அவரை முழுமையான மனிதன் என்று கூற முடியாது. முழுமையான மனிதன் என்று கூறும்போது உடலும் உள்ளமும் ஒருங்கிணைந்திருந்த நிலைமையைக் குறிப்பிடலாம். நவீன தொழில்நுட்ப வளர்ச்சியடைந்து வருகின்ற காலத்தில் மனிதன் பல்வேறு மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றான்.

உதாரணமாக,

- இயற்கை அனர்த்தங்கள்
- போர்ச் சூழல்
- குடும்பச் சூழல்
- பொருளாதார நிலை
- நவநாகரீக வளர்ச்சி
- இளவயதுத் திருமணம்
- பாலியல் வல்லுறவு

போன்ற காரணிகள் மனிதனுடைய ஆரோக்கிய வாழ்வுக்கு குந்தகம் விளைவிக்கின்றன. ஆலய வழிபாடுகள், தியானம், யோகாப் பயிற்சிகள், இசை நடனம் போன்றவற்றில் ஈடுபாடு கொள்ளவதனால் எம்மைச் சூழ்ந்துள்ள மன அழுத்தங்களிலிருந்து விடுபட வாய்ப்புக் கிடைக்கின்றது. இதனால் உடல் ஆரோக்கியம் உளஆரோக்கியம் பேணப்பட்டு நீண்ட ஆயுளும் கிடைக்கின்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழிக்கு இணங்க எதிர்காலச் சமூகம் நோயின்றி வாழவேண்டுமானால் ஆரோக்கியப் பாதையை நோக்கிச் செல்ல வேண்டும் சிறந்த நல்ல ஆரோக்கிய வாழ்வு சிறந்ததோர் நாட்டைக் கட்டியெழுப்பும் எனவே, ஆரோக்கியம் பேணுவோம். நீண்ட ஆயுளுடன் நலமாக வாழ்வோம்..

****



Give me a child for seven years afterwards,
let the God or the devil take the child,
they cannot change the child.

~ A. P. J. Abdul Kalam

# மறைந்து வரும் தமிழரின் பாரம்பரியமும் பழக்கவழக்கங்களும்

அரிது அரிது மானிடராய்
பிறத்தல் அரிது - என்றார்

தமிழ் மூதாட்டி ஔவை. இவ் வையகத்திலே மானிடராகப் பிறவி எடுத்த ஒவ்வொரு மனிதனும் மானிடர் என்று சொல்லப்படும் இலக்கணத்திற்கு அமைவாக வாழவேண்டும். அப்போது தான் உலகம் போற்றும், வாழ்த்தும், இல்லையேல் ஏளனஞ் செய்து தூற்றும். வாழ்வாங்கு வாழ வேண்டுமானால் யாது செய்யவேண்டும், ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். சமூக நியதிகள், விழுமியங்கள், பாரம்பரிங்கள், நியமங்கள் என்பவற்றைக் கடைப்பிடித்து அவற்றோடு இயைந்து வாழ வேண்டும்.

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு.

என்று பாடினார் கவிஞன் நாமக்கல் புலவர். அன்பு, அறம், கொடை வீரம், மானம், ஒழுக்கம் போன்ற பல்வேறு சிறப்புக்களைப் பொருந்தியது தமிழர் பாரம்பரியம். இச்சிறப்புக்களை பழந்தமிழ் நூல்கள் தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன என்பது யாவரும் அறிந்த பேருண்மை. ஆனால் இத்தமிழர் பாரம்பரியத்தில் இன்றைய நிலைமையை சிந்திக்கின்ற போது மானிடப்பிறவி எடுத்த ஒவ்வொரு மனிதனும் வெட்கத்துக்கு உள்ளாகவேண்டிய துர்ப்பாக்கிய நிலையே ஏற்படுகிறது. தொட்டிலிருந்து சுடுகாடு வரைக்கும் கடைப்பிடிக்க வேண்டிய பாரம்பரிய கூறுகள் மறைந்தும் மறந்தும் போகின்றன.

நவ நாகரிகக் கடலிலே மூழ்கித் தவிக்கின்றனர் இன்றைய தமிழர். இத் தமிழர் நாகரிகத்தில் இன்றைய ஆடை அணிகலன்களில் மாற்றம் கண்டிருக்கின்றன.

“பழையன கழிதலும்
புதியன புகுதலும் வழுவல்ல
கால வகையினாலே” என்றார். ஒல்காப் புகழ்பெற்ற தொல்காப்பியனார். மாற்றங்கள் வாழ்வில் தேவைதான். மாற்றங்களை நாம் கட்டியாள வேண்டுமே தவிர மாற்றங்கள் நம்மை ஆளக்கூடாது. அவற்றிற்கு நாம் அடிபணியவும் கூடாது.

வாழ்வியற் சடங்குகள் பண்டிகைகள் மற்றும் பேசும் மொழியிற் கூட பண்டைய பாரம்பரியமும் செம்மையும் மறக்கடிக்கப்படுகின்றன.

அறவழியில் பொருள் சேர்த்தல், இன்சொல் பேசுதல், குறிப்பறிந்து பேசுதல் போன்றவை சமுதாயத்தை நற் சமுதாயமாக உருவாக்க உதவுகின்ற தூண்களாகும். இவையே சிறந்ததொரு நாட்டை தோற்றுவிக்கும்.

“இன்றைய இளைஞரே
நாளைய தலைவர்” என்று கூறுவார்கள். வளர்ந்து வரும் இளைஞர் சமுதாயத்திற்கு நல்வழி காட்டி வளர்த்து விடவேண்டியது சமூக நிறுவனங்களின் தலையாய கடமையாகும்.

“தோன்றிப் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று என்றார் பொய்யாமொழிப் புலவர். எனவே அன்னம் போல நன்மை தீமைகளைப் பகுத்தாய்ந்து நல்லவற்றை கடைப்பிடிப்போம்.

சு.கர்சினி,
தரம் - 9

# நற்பண்புக்கு எப்போதும் மதிப்பு அதிகம்

பலவகையான பொருட்களுடன் ஒரு வியாபாரி சந்தைக்குப் போனான். எல்லாவற்றையும் நல்ல விலைக்கு விற்றான். அதனால் நிறைந்த இலாபம் கிடைத்தது. பணத்தை எல்லாம் ஒரு தோற்பையில் வைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் தன் ஊருக்குத் திரும்பினான். வழியில் ஒரு கோயிலைக் கண்டான். அதன் உள்ளே நுழைந்து அக்கோயிலில் இருந்த கடவுளுக்கு நன்றி கூறி வணங்கினான். கும்பிடும்போது தன் பக்கத்தில் வைத்த பையை மறந்து விட்டு வெளியேறித் தன் ஊரை நோக்கி நடந்தான்.

கோயிலுக்கு வந்த வேறொருவன் அந்தத் தோல் பையைப் பார்த்தான். அதன் பாரத்தைக் கொண்டு அதில் பெரும் தொகை பணம் இருப்பதை உணர்ந்தான். கடவுளை வணங்கிய பின் அந்தப்பையுடன் வீடு திரும்பினான். அவன் வீடு கோயில் இருந்த தெருவிலேயே இருந்தது. வீட்டுக்கு வந்ததும் பையைப் பத்திரப்படுத்தினான். பணப்பையை இழந்தவர் இங்கே விசாரிக்கவும் என்று எழுதித்தன் வீட்டுக் கதவில் தொங்க விட்டான். கோயிலில் பையைத் தவறவிட்ட வியாபாரி தன் ஊரை நெருங்கிக் கொண்டிருந்தான்.

திடீரென்று அவனுக்கை பையின் நினைவு வந்தது. திடுக்கிட்டு திரும்பிக் கோயிலுக்கு ஓடினான். பையைக் காணாமல் மனம் பதறி அழுதான். அங்கிருந்தவர்களை விசாரிததான். அதைப்பற்றி எவருக்கும் தெரியவில்லை. ஒன்றும் புரியாமல் அழுதுகொணடே தெருவில் நடந்தான். ஒரு வீட்டுக் கதவில் தொங்கிக் கொண்டிருந்த அட்டையொன்றில் ஏதோ எழுதியிருந்ததைப் பார்த்தான். உடனே அந்த வீட்டுக் கதவைத் தட்டினான். வெளியே வந்தவனிடம் தன் பையைப் பற்றி விபரங்களை எல்லாம் கூறி சாவியையும் காட்டினான்.

உடனே அவன் வியாபாரியை அமரச் சொல்லி விட்டு உள்ளே சென்றான். தோற்பையைக் கொண்டு வந்து கொடுத்தான். அதை வாங்கிய வியாபாரி சற்று நேரம் யோசித்து விட்டு 'நேர்மையான உயர்ந்த உள்ளம் படைத்த நீயே இதை வைத்துக்கொள். எனக்கு வேண்டாம்' என்று பையைத் திருப்பிக் கொடுத்தான். 'உன் உழைப்பில் சம்பாதிக்கப்பட்ட பணம் எனக்கெதற்கு? நீயே இதை வைத்துக்கொள்' என்றான் பணத்தைக் கண்டெடுத்தவன். 'நான் வாங்கவே மாட்டேன்' 'இனி இது உன்னுடையது தான்' என்று சொல்லிவிட்டு வியாபாரி அங்கிருந்து புறப்பட்டான்.

'திருடன் திருடன் என்று கத்திக் கொண்டே வியாபாரியின் பின்னால் சென்றான் பணத்தை வைத்திருந்தவன். அருகே இருந்தவர்கள் வியாபாரியைத் தடுத்து நிறுத்தினார்கள். 'என்ன திருடினான்' என்று கேட்டார்கள். 'என் நல்ல பெயரையும் இதுவரை நான் காப்பற்றி வரும் மதிப்பையும் திருடிக்கொண்டான்' என்று கூறி நடந்ததை விளக்கினான். பணத்தை கண்டெடுத்தவன். எல்லோரும் அந்த வியாபாரியைக் கட்டாயப்படுத்தி பையை அவனிடம் கொடுத்து அனுப்பினார்கள். வியாபாரியும் மக்களும் பணத்தைத் திருப்பிக் கொடுத்தவனின் மிக உயர்ந்த பண்பையும் கண்ணியத்தையும் புகழ்ந்து கொண்டே போனார்கள்.

இ. டிசாந்
தரம் 9

# விஞ்ஞானமும் மனித வாழ்வும்

இறைவனின் படைப்புக்களுள் ஆறறிவுடைய இனம் மனித இனமேயாகும். ஏனைய உயிரினங்களைவிட சிந்திக்கும் ஆற்றல் உள்ளது. மனித இனம் எனக் கூறப்படுகின்றது. தக்கன இவை தகாதன இவை எனப் பிரித்தறியும் பகுத்தறிவு மனிதனுடன் கூடப்பிறந்தது. மனிதனுடைய பகுத்தறிவு சிந்தனை ஆகியவற்றின் மூலம் கொண்ட வல்லமையே விஞ்ஞானம் தோற்றம் பெற காரணமாயிற்று.

இன்றைய உலகில் மனிதனது தினசரி வாழ்வின் பல செயற்பாடுகளை பல வசதிகள் கொண்டதாக மாற்றியமைத்து கொடுத்துள்ளமை, விஞ்ஞானத்தின் விந்தை எனலாம். மின்வலு மூலம், உணவு தயாரிக்கும் சமையலறை முதல் அலுவலகங்கள் வரை வாழ்வின் செயற்பாடுகளை இலகுவாக்கி, ஒளிமயமான - தாக்க விஞ்ஞானம் மிகவும் உதவுகின்றது. முன்னைய காலத்தில் தகவல் தெரிவிக்க “புறாத்தூது” அனுப்பினர் என்பது வரலாறாகும். தற்போது விஞ்ஞான விந்தையினால் தொலைபேசி, தந்தி போன்றவற்றை கண்டு பிடித்தமையால் மக்களது தொடர்பாடல் இலகுவாக மாறியது. மேலும் நவீன விஞ்ஞான பரிமாண வளர்ச்சியினால் இலத்திரனியல் செய்தி பரிமாற்றத்தின் மூலம் “இன்ரநெற், ஈமெயில், “மற்றும் கணனி மூலம் நேரில் பார்த்து வெளிநாட்டவருடன் உரையாடுதல் போன்ற வசதிகள் மனித வாழ்வில் கிடைத்துள்ளன.

அறிவினைப் பெருக்க நூலகங்களை நாடிச் சென்ற காலம் மாறி இன்று இணையத்தின் உதவியுடன் உலக நடப்புக்கள், பலவித துறைகள் சார்ந்த அறிவியல் உண்மைகளை மக்கள் அறிகின்றார்கள். விஞ்ஞானம் மின்சார இயக்கத்திற்கான முக்கியத்துவத்தை தரும்வேளை, 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞான அதிதுரித வளர்ச்சியின் மைல் கல்லாக கணனி அமைந்துள்ளதுடன் இன்று கணனி, உலகின் அனைத்து துறைகளிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

மனித வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ள விஞ்ஞானம் மருத்துவதுறையிலும் விந்தைகளை ஏற்படுத்தி வருகின்றது. புதிய தொழினுட்பங்கள் வைத்தியத்துறையில் புகுத்தப்பட்டு நவீன உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. செயலிழந்த மனித உடலின் பாகங்களை மாற்றக் கூடிய வல்லமையை விஞ்ஞானம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளமை சிறப்பம்சமாக கருதலாம்.

விஞ்ஞானத்தின் பயனாக வளர்ந்துள்ள விஞ்ஞான தொழினுட்பம், மனிதர்களின் அன்றாட வாழ்விற்கு மிகவும் பயனுள்ளதாக அமைவது மட்டுமன்றி சில பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. வாகனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றிலிருந்து வெளிவிடப்படும் புகை, ஏனைய கழிவுகள் என்பன சுற்றுச்சூழலை மாசுபடுத்தி பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் மிக முக்கியமான கண்டுபிடிப்புக்களான அணு ஆயுதங்கள் உலகினையே ஆட்டிப்படைக்கும் ஒரு பயங்கரமான நிலையை உருவாக்கி உள்ளன.

நியூட்டனின் மூன்றாம் விதி கூறுவதைப் போன்று ‘எந்த விசைக்கும் எதிரும் சமமுமான மறுதாக்கம் இருக்கும்’ என்பதனை போன்று விஞ்ஞானத்தின் அதிதுரித வளர்ச்சியானது பல தரப்பட்ட ஆக்கபூர்வமான பாதைகளை நோக்கி வளர்ச்சியடைந்தாலும் ஒரு சில பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

கல்லுடன் கல்லுரஞ்சி நெருப்பை உருவாக்கி போதிய வெளிச்சமின்றி, மயங்கிய ஒளியிலே பின்தங்கிய வாழ்க்கை வாழ்ந்து வந்த மனிதன் இன்று மின்சாரத்தின் உதவியினால் கண்ணைப் பறிக்கின்ற வண்ண ஒளி பெற்று எண்ணற்ற பெருமையுடன் இரவையே பகலாக்கி இன்பவாழ்வு வாழ்கின்றான் என்றால் விஞ்ஞானம் மனித வாழ்க்கைக்கு செய்யும் உதவிகளை ஊகித்தறியலாம்.

பகுத்தறிவுள்ள மனிதன் தன் அறிவைப் பயன்படுத்தி தீமை தரும் செய்கைகளைத் தடுத்து நன்மை தரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு விஞ்ஞானத்தைப் பயன்படுத்துவானானால் விஞ்ஞானம் மனித வாழ்வுக்கு முற்று முழுதாக நன்மையே பயக்கும் என்பதில் ஐயமேயில்லை

தரம் - 10
பொ.தாட்சாயினி

---

# BLOOD CIRCULATION

Life on earth was formed from one cell. This cell split into several cells. These cells combined together and formed tissues. Tissues joined together and formed organs. Organs formed grouped together and formed systems. There are many systems inside the human body. Some of them are the Digestive system, Respiratory system, Blood circulatory system, Nervous system etc.,

Blood circulatory system is attached with a heart. The process of blood circulation is carried out in the blood circulatory system. Heart, blood, blood vessels, veins and arteries are important parts of the blood circulatory system. Heart has 4 chambers. Left auricle, left ventricle, right auricle and right ventricle. Blood consists 90% of water. There are 3 types blood cells. They are white blood cells, red blood cells and blood platelets. WBC protects us from infectious diseases.

There are 3 circulatory processes occurring simultaneously within the body. Firstly systemic circulation carries blood around the body, pulmonary circulation carries blood to the lungs and coronary circulation provides the heart with its own supply of blood.
So the blood circulation helps us to live a healthy and happy life.

**Miss.Kowsalya.N.**
**Grade 11**

---

# UNO

The United Nations (UN) was formed on 24th October 1945. Fifty one countries came together with the one purpose of promoting Peace in the world through mutual cooperation. Today, almost every nation in the world is a member of the United Nations. There is a total num ber of 191 members.
The United Nations sets out the rules and obligations of member nations. The UN has four main purposes: to maintain international peace and security, to develop friendly co-operation between countries, to solve international problems and respect all human rights and to serve all alike.

Although the United Nations cannot make laws and is not a governing power, it provides guidelines in order to prevent conflict between nations. It also develops rules in order to help achieve peaceful conclusions to problems affecting the world. The United Nation' view is that, no matter how small or poor a nation is, it still has a voice and a say in the development of the world.

**Miss.Tharshika.R.**
**Grade 11**

## அன்னை

ஈரைந்து மாதங்கள்
கருவோடு சுமந்தவளே
கண்ணை இமை காப்பது போல்
எம்மை என்றும் காத்தவளே

உதிரத்தை பாலாக்கி
உணவாகத் தந்தவளே
உயிரோடு உணர்வையும்
ஊட்டி வளர்த்தவளே

நோயின்றி நாம் வாழ
நீ என்றும் நொந்தவளே
திரியாக எரிந்து நின்று
எமக்கு ஒளி தந்தவளே

அறிவோடு அன்பையும்
அயராது பொழிந்தவளே
பற்றோடு உமை என்றும்
பணிந்திடுவேன் அன்னையே

கோ.துஷானி
தரம் - 5

## ஆசான்கள்

ஊழல்கள் இல்லாத உத்தமர்கள்
உன்னத உலகின்
உயிர்ச் சொத்துக்கள்
உயிரில் கலந்த
உறவின் சிகரங்கள்
உண்மையுள்ள
உலகின் மகாத்மாக்கள்
பாரினில் உதித்த
கலங்கரை விளக்குகள்
பாரே வியக்கும்
சிறந்த சிந்தனையாளர்கள்
பாசத்தை பண்போடு
பண்ணிசைப்பவர்கள்
தனித்துவமான உலகின்
சாதனைச் சிற்பிகள்!
காலங்களினால் கவரப்படாத
தனித்துவ உலகின்
சிறந்த ............
நாயகர்கள்

தர்சிகா
தரம் 11

## புத்தாண்டு

சித்திரை ஆண்டே வா வா வா
சிரித்து மகிழ்வோம் வா வா வா
பூக்கள் மலரும் வா வா வா
புதிய ஆண்டே வா வா வா

பழங்கள் பழுக்கும் வா வா வா
பறித்து உண்போம் வா வா வா
பழமைகள் களைவோம் வா வா வா
புதுமைகள் செய்வோம் வா வா வா
சித்திரை ஆண்டே வா வா வா
சிரித்து மகிழ்வோம் வா வா வா

செல்வி பேரின்பமூர்த்தி ஹரினி
தரம் 2

# GARDENING

Gardening is a pleasurable and profitable hobby. We need not have a large garden. Even a small plot of land or a few pots will help us make a small garden. If we have a garden, we should plant fruit saplings as well as flower plants. They add colour to our garden and bring us profits as well.

It is very interesting to see when our plants grow well and give us flowers and fruits. Since we do not use any harmful chemical, the fruits are very fresh and clean. Even the flowers that are in full bloom could be sold. We can earn a few rupees. That is also an interesting form of self-employment.

Gardening is a very good way of maintaining our mental health. When the small plants begin to grow and spread their branches and when they begin to bloom we feel very happy. When we see the ripe fruits we will realize that we have been rewarded for our labour. So, gardening is a pleasurable and profitable hobby that brings us mental satisfaction too.

**Mas.S.Tharsikan.**
**Grade 8**

## எமது நாடு

- எமது இலங்கை நாடு மிகவும் அழகானது
- எமது இலங்கை நாட்டில் ஏலம், கறுவா, கராம்பு என்பன உள்ளன.
- இலங்கை நாட்டில் பல இனத்தவர்கள் உள்ளனர். தமிழர், சிங்களவர், பறங்கியர், முஸ்லீம்கள் எனப் பலர் உள்ளனர்.
- இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை பாக்கு நீரிணையாகும்.
- இலங்கையின் இயற்கை துறைமுகமாக திருகோணமலைத் துறைமுகம் அமைந்துள்ளது.
- இலங்கை குடியரசான ஆண்டு 1972 மே 22 ஆகும்.
- எனவே நம் இலங்கை நாட்டை நேசித்து நாட்டுப்பற்றாளராக வாழ்வோம்.

இ.கிருஷிகா
தரம் 5

## (கிளி)

1. கிளி அழகான பறவை.
2. இது பச்சை நிறம்
3. இது பழம் தின்னும்
4. கிளியின் சொண்டு சிவப்பு நிறம்
5. கிளிக்கு பேசப் பழக்கினால் பேசும்
6. மரங்களில் எட்டாத பழங்களை கிளிகளுக்கு என விடுவோம்.
7. பறவைகளுக்கு ஒவ்வொருநாளும் பாத்திரத்தில் நீர் வைப்போம்.
8. பறவைகளுக்கு துன்பம் செய்யக்கூடாது

செல்வி பேரின்பமூர்த்தி ஹரினி
தரம் - 2

# லூயி பாஸ்டர்

1. லூயி பாஸ்டர் என்பவர் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆவார்.
2. இவர் பிரான்ஸ் நாட்டின் டோல் என்னும் இடத்தில் 1822 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் திகதி பிறந்தார்.
3. பாஸ்டர் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கி 1847 ஆம் ஆண்டு விஞ்ஞானப் பட்டம் பெற்றவர்
4. 1858 ஆம ஆண்டு நொதித்தல் பற்றிய ஆராய்ச்சியில் லூயிஸ்பாஸ்டர் ஈடுபட்டார்.
5. உணவுப் பொருட்கள் பழுதடைவதற்கு நுண்ணுயிர்களே காரணம் என பாஸ்டர் கண்டு பிடித்தார்.
6. பாஸ்டர் கால் நடைகளுக்கு வரும் அந்திராஸ் என்னும் நோயையும் கோழிகளுக்கு வரும் வாந்திபேதி என்னும் நோயை தடுப்பதற்கு மருந்தை கண்டுபிடித்து உதவினார்.
7. லூயிபாஸ்டர் நுண்ணுயிர் தொடர்பான தமது ஆராய்சியை மேலும் வளர்த்துக் கொண்டார்.
8. விசர் நாய்கடி நோயினை தடுப்பதற்கான ஊசி மருந்தையும் இவர் கண்டு பிடித்தார்.
9. பாஸ்டரின் கண்டு பிடிப்புகளைப் பாராட்டி பல நாடுகளும் பல்கலைக்கழகங்களும், நிறுவனங்களும் பாஸ்டருக்கு பல பட்டங்களும் பதக்கங்களும் வழங்கிக் கௌரவித்தன.
10. உறுதியும் உழைப்பும் உள்ளவனுக்கு வெற்றி திண்ணம் என்பது லூயி பாஸ்டரின் கொள்கையாகும்.

S.Lathusha
Grade - 5

## திருவள்ளுவர்

1. திருவள்ளுவர் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்.
2. இவர் திருக்குறள் என்னும் நூலை இயற்றியுள்ளார்
3. திருக்குறள் 1330 குறட்பாக்களைக் கொண்டுள்ளன.
4. திருவள்ளுவர் தமிழ் நாட்டில் மயிலாப்பூரில் வாழ்ந்தவர்
5. இவரது கருத்துக்கள் உலக மக்கள் அனைவருக்கும் ஏற்றது
6. திருவள்ளுவரின் திருக்குறள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
7. திருவள்ளுவர் மக்கள் வாழ்க்கைக்கு வழி காட்டும் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.
8. இவரை செந்நாப்போதர், வள்ளுவர், பொய்யாமொழிப்புலவர், ஐயன் என்றெல்லாம் அழைப்பர்.
9. வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு என்று பாரதியார் திருவள்ளுவரைப் புகழந்து பாடியுள்ளார்.
10. எனவே நாமும் திருவள்ளுவரைப் போல் வாழ்ந்து காட்டுவோம்.

வ.பவிஷாலினி
தரம் - 5

*********

## ஆசிரியர் சேவையின் நிறைவினை நோக்கி ...... 09.07.2016




**திருமதி நாகராஜேஸ்வரி சுகிர்தலிங்கம்**

ஆசிரியர் சேவை தரம் I

"அர்ப்பணிப்பு மிக்க தங்கள் சேவை பாடசாலை வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்"

# யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.
## பரிசுத்தினம் - 2016.
## பரிசு பெறுவோர் விபரம்.

| தரம் | இல | மாணவர் பெயர் | பாடங்கள் | இடம் |
|---|---|---|---|---|
| தரம் 01 | 01. | செல்வி. பேரின்பமூர்த்தி ஹரினி | தமிழ், கணிதம், சுற்றாடல், சைவநெறி | 1 |
| | 02. | செல்வி. இராசமோகன் ரிஷாந்தினி | சுற்றாடல், | 1 |
| | | | தமிழ், சைவநெறி | 2 |
| | 03. | செல்வன். கஜேந்திரன் பிரவின் | கணிதம், | 2 |
| | | | சைவநெறி | 3 |
| | 04. | செல்வன். ரவிக்குமார் கபித்வஜன் | தமிழ், கணிதம், சுற்றாடல், | 3 |
| | 05. | செல்வன். ஸ்ரீபன் றொசான் | கத்தோலிக்கம் | 1 |
| | 06. | செல்வன். ஜெகதாஸ் துஷிபன் | கத்தோலிக்கம் | 2 |
| | 07. | செல்வி. கெனடி ஸ்ரெபானி | கத்தோலிக்கம் | 3 |
| தரம் 02 | 08. | செல்வன். ஜெகதீஸ்வரன் ஜீவிதன் | கணிதம், சுற்றாடல், சைவநெறி | 1 |
| | | | தமிழ் | 2 |
| | 09. | செல்வன். கார்த்திக் சஞ்சிவ் | தமிழ் | 1 |
| | | | கணிதம், சுற்றாடல், சைவநெறி | 2 |
| | 10. | செல்வி. ஜெயந்தகுமார சுபாசி நிஷன்சலா | தமிழ், கணிதம், | 3 |
| | 11. | செல்வன். செல்வகுமார் செந்தாளன் | சுற்றாடல், சைவநெறி | 3 |
| | 12. | செல்வன். திலீபன் சந்தோஷ் | கத்தோலிக்கம் | 1 |
| | 13. | செல்வன். சத்தியராஜ் டிலக்சன் | கத்தோலிக்கம் | 2 |
| | 14. | செல்வி. மாசிலாமணி தர்சிகா | கத்தோலிக்கம் | 3 |
| தரம் 03 | 15. | செல்வன். குமாரவடிவேல் தேவிஷன் | சுற்றாடல், சைவநெறி, தமிழ் | 1 |
| | | | கணிதம், | 2 |
| | 16. | செல்வன். கேதீஸ்வரன் அபிஷாந் | கணிதம், ஆங்கிலம் | 1 |
| | | | சுற்றாடல், தமிழ் | 2 |
| | | | சைவநெறி, | 3 |
| | 17. | செல்வி. சதீஸ்குமார் சங்கரி | தமிழ், சைவநெறி, | 2 |
| | | | சுற்றாடல், ஆங்கிலம் | 3 |
| | 18. | செல்வி. சசிகரன் கெனிஷா | ஆங்கிலம் | 2 |
| | | | கணிதம், | 3 |
| | 19. | செல்வி. கொர்ணலிஸ் ஏஞ்சலின் | கத்தோலிக்கம் | 1 |
| | 20. | செல்வன். அருள்ஜென்சன் ஜோய் | கத்தோலிக்கம் | 2 |
| | 21. | செல்வன். ஜெகதாஸ் டினுஜன் | கத்தோலிக்கம் | 3 |
| தரம் 4 | 22. | செல்வி. வரதராஜ் பவிஷாலினி | சுற்றாடல், சைவநெறி, தமிழ், கணிதம், ஆங்கிலம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 23. | செல்வன். கிருபாகரன் டினோதன் | தமிழ், ஆங்கிலம் | 2 |
| | | | கணிதம், சுற்றாடல், சைவநெறி, | 3 |
| | 24. | செல்வி. செல்வகுமார் லதுஷா | கணிதம், சுற்றாடல், சைவநெறி, | 2 |
| | | | தமிழ் | 3 |
| | 25. | செல்வி. கோவிந்தன் துஷானி | ஆங்கிலம் | 3 |
| | 26. | செல்வன். குமரகுருபரன் யாபேஸ் | கத்தோலிக்கம் | 1 |
| | 27. | செல்வி. றெஜி றொசானி | கத்தோலிக்கம் | 2 |
| | 28. | செல்வன். சுரேஸ்குமார் தருசன் | கத்தோலிக்கம் | 3 |
| | 29. | செல்வி. சதீஸ்குமார் சாம்பவி | சுற்றாடல், சைவநெறி, தமிழ், கணிதம், ஆங்கிலம் | 1 |
| | 30. | செல்வி. சேகர் வினுஷா | சுற்றாடல், சைவநெறி, தமிழ், கணிதம், | 2 |
| தரம் 05 | 31. | செல்வன். சாந்தராசா வினுசன் | ஆங்கிலம் | 2 |
| | | | சுற்றாடல், சைவநெறி, தமிழ், கணிதம், | 3 |
| | 32. | செல்வி. நகுலேஸ்வரன் லக்ஸ்சனா | ஆங்கிலம் | 3 |
| | 33. | செல்வி. ஜெகதாஸ் கஜனி | கத்தோலிக்கம் | 1 |
| | 34. | செல்வி. அருள் அன்ரனி அபிஷனா | கத்தோலிக்கம் | 2 |
| | 35. | செல்வி. அன்ரனி கிறிஸ்ரி அபிஷா | கத்தோலிக்கம் | 3 |
| தரம் 06 | 36. | செல்வி. செல்வகுமார் செலக்சனா | சைவநெறி, தமிழ், கணிதம், ஆங்கிலம் வரலாறு,சங்கீதம், குடியுரிமையும் வா.தேர் | 1 |
| | | | விஞ்ஞானம், புவியியல், சுகாதாரம் | 2 |
| | 37. | செல்வன். மோகன்ராஜ் சனராஜ் | சுகாதாரம் | 1 |
| | | | சைவநெறி, ஆங்கிலம் சித்திரம் | 2 |
| | | | விஞ்ஞானம், குடியுரிமையும் வா.தேர் | 3 |
| | 38. | செல்வன். பாலசுப்பிரமணியம் ஐங்கரன் | புவியியல், சித்திரம் | 1 |
| | | | கணிதம், வரலாறு, குடியுரிமையும் வா.தேர் | 2 |
| | | | தமிழ், சுகாதாரம் | 3 |
| | 39. | செல்வி. அசோக் திலக்ஷனா | விஞ்ஞானம் | 1 |
| | | | தமிழ், சங்கீதம், | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சைவநெறி, வரலாறு, | 3 |
| | 40. | செல்வன். தயாபரன் அலெக்ஸ் | கத்தோலிக்கம் | 2 |
| | | | கணிதம் | 3 |
| | 41. | செல்வன். எட்மன் சாள்ஸ் கனிஸ்ரன் | கத்தோலிக்கம் | 1 |
| | 42. | செல்வன். சத்தியராஜ் ஜீன்டினேஸ் | கத்தோலிக்கம், சித்திரம் | 3 |
| | 43. | செல்வி. அருள்ராஜ் எக்சிபா | ஆங்கிலம் | 3 |
| | 44. | செல்வி. நாகதீசன் சினேகா | புவியியல் | 3 |
| | 45. | செல்வி. விமல்ராஜ் விதுசா | சங்கீதம் | 3 |
| தரம் 07 | 46. | செல்வன். செந்தில்நாதன் தர்சிகன் | கணிதம், ஆங்கிலம் விஞ்ஞானம், சித்திரம் | 1 |
| | | | புவியியல், குடியுரிமை | 2 |
| | | | தமிழ், வரலாறு, சுகாதாரம் | 3 |
| | 47. | செல்வன். ஜெகதீஸ்வரன் பிரதீபன் | சைவநெறி, புவியியல் வரலாறு, செ.மு தொ.நு | 1 |
| | | | கணிதம், சங்கீதம், | 2 |
| | | | ஆங்கிலம், குடியுரிமை விஞ்ஞானம், | 3 |
| | 48. | செல்வன். வீரகுமார் சாருஜன் | சுகாதாரம் | 1 |
| | | | சைவநெறி, தமிழ், வரலாறு விஞ்ஞானம், ஆங்கிலம் | 2 |
| | | | கணிதம், புவியியல் செ.மு தொ.நு, சித்திரம் | 3 |
| | 49. | செல்வி. சுமணன் சேந்தினி | தமிழ், குடியுரிமை, சங்கீதம் | 1 |
| | | | செ.மு தொ.நு, | 2 |
| | | | சைவநெறி, ஆங்கிலம் | 3 |
| | 50. | செல்வன். சுப்பையா கீர்த்திகன் | கத்தோலிக்கம் | 1 |
| | 51. | செல்வன். சத்தியமூர்த்தி தூயவன் | சுகாதாரம் | 2 |
| | 52. | செல்வன். சந்திரராசா நிந்துசன் | சுகாதாரம், சித்திரம் | 2 |
| | 53. | செல்வி. குணசேகரன் மிதுஷா | சங்கீதம் | 3 |
| 1 | 54. | செல்வன்.இந்திரகுமார் டிசாந் | தமிழ்,கணிதம், விஞ்ஞானம், குடியுரிமை, சித்திரம் சுகாதாரம் | 1 |
| | | | ஆங்கிலம், புவியியல் | 2 |
| | | | சைவநெறி, வரலாறு செ.மு தொ.நு, | 3 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 55. | செல்வி. சிவலிங்கம் ஜஸ்வினி | புவியியல் | 1 |
| | | | சைவநெறி, கணிதம், வரலாறு, சுகாதாரம் சங்கீதம், செ.மு தொ.நு, | 2 |
| | | | தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், குடியுரிமை | 3 |
| | 56. | செல்வி. சண்முகம் சசிக்கா | சைவநெறி, ஆங்கிலம், வரலாறு, செ.மு தொ.நு, | 1 |
| | | | தமிழ், விஞ்ஞானம், புவியியல், குடியுரிமை | 2 |
| | | | சுகாதாரம், சங்கீதம், | 3 |
| | 57. | செல்வன். முருகேசபிள்ளை கிருசாந்தன் | சித்திரம் | 2 |
| | | | கணிதம், ஆங்கிலம் | 3 |
| | 58. | செல்வி. சிவகுமார் சிவரஞ்சினி | சங்கீதம் | 1 |
| | 59. | செல்வன். றெஜி றெஜிஸ்தன் | கத்தோலிக்கம் | 1 |
| | 60. | செல்வன். கேதீஸ்வரன் கேதாரன் | சித்திரம் | 3 |
| தரம் 09 | 61. | செல்வி. பொன்னம்பலம் தாட்சாயினி | சைவநெறி, தமிழ், கணிதம் ஆங்கிலம், புவியியல், வரலாறு, சுகாதாரம் சங்கீதம், செ.மு தொ.நு, | 1 |
| | | | குடியுரிமை, விஞ்ஞானம், | 2 |
| | 62. | செல்வன். ராஜன்கிறிஸ்தோபர் கிஷாந்தன் | குடியுரிமை, விஞ்ஞானம், | 1 |
| | | | தமிழ், கணிதம் ஆங்கிலம், புவியியல், வரலாறு, சுகாதாரம், செ.மு தொ.நு, சித்திரம் | 2 |
| | | | சைவநெறி | 3 |
| | 63. | செல்வன். நாகதீசன் அஜய் | சித்திரம் | 1 |
| | | | சைவநெறி | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தமிழ், கணிதம், புவியியல், விஞ்ஞானம், வரலாறு, குடியுரிமை, சுகாதாரம், செ.மு தொ.நு, | 3 |
| | 64. | செல்வன். சிறிசேனகுரே கிரிகரன் | கத்தோலிக்கம் | 1 |
| | | | சித்திரம் | 3 |
| | 65. | செல்வி. சந்திரநாதன் மதுமிதா | சங்கீதம், | 2 |
| | | | ஆங்கிலம் | 3 |
| | 66. | செல்வி. சந்திரநாதன் மதுஷா | சங்கீதம் | 3 |
| தரம் 10 | 67. | செல்வி. ராஜன்கிறிஸ்தோபர் தர்ஷிகா | சைவநெறி, தமிழ், வரலாறு, ஆங்கிலம், சங்கீதம், வணிகம், விவசாயம் | 1 |
| | | | கணிதம், விஞ்ஞானம் | 2 |
| | 68. | செல்வி. நவரட்ணம் கோசல்யா | கணிதம், விஞ்ஞானம், ICT | 1 |
| | | | சைவநெறி, தமிழ், வரலாறு, சங்கீதம், வணிகம், | 2 |
| | | | ஆங்கிலம் | 3 |
| | 69. | செல்வன். யோகநாதன் ரேணுகானன் | ஆங்கிலம், குடியுரிமை, ICT | 2 |
| | | | தமிழ், கணிதம்,விஞ்ஞானம் வரலாறு | 3 |
| | 70. | செல்வன். ஜெயகீதன் தயன்சிகன் | விவசாயம் | 3 |
| | 71. | செல்வி. சிவலிங்கம் லதுசிகா | மனைப்பொருளியல், குடியுரிமை | 1 |
| | | | சைவநெறி, சங்கீதம் | 3 |
| | 72. | செல்வி. எட்மன்சாள்ஸ் விதுஷா | கத்தோலிக்கம் | 1 |
| | | | மனைப்பொருளியல், | 2 |
| | | | சித்திரம் | 3 |
| | 73. | செல்வி. அருள்ராஜ் துஸ்யந்தினி | கத்தோலிக்கம், சித்திரம் | 2 |
| | | | மனைப்பொருளியல், குடியுரிமை | 3 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 74. | செல்வன். துரைபாலசிங்கம் காந்தருபன் | விவசாயம் | 2 |
| தரம் 11 | 75. | செல்வன். நாகதீசன் நாகசீலன் | சைவநெறி, தமிழ், தமிழ் இலக்கியம் நயம், கணிதம், விஞ்ஞானம், ICT வணிகம் | 1 |
| | | | வரலாறு | 2 |
| | 76. | செல்வி. சத்தியமூர்த்தி சாலினி | ஆங்கிலம், வரலாறு விவசாயம் | 1 |
| | | | தமிழ், தமிழ் இலக்கிய நயம்,கணிதம், விஞ்ஞானம், வணிகம் | 2 |
| | | | சைவநெறி | 3 |
| | 77. | செல்வி. நகுலேஸ்வரன் ருலைக்சனா | சங்கீதம் | 1 |
| | | | சைவநெறி, ஆங்கிலம், ICT | 2 |
| | | | தமிழ், வரலாறு, வணிகம் | 3 |
| | 78. | செல்வி. உருத்திரகுமார் டிலக்சி | குடியுரிமை, சித்திரம் | 1 |
| | | | ICT | 3 |
| | 79. | செல்வன்.இந்திரகுமார் கவிக்சன் | விவசாயம் | 2 |
| | | | தமிழ் இலக்கிய நயம்,கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம் | 3 |
| | 80. | செல்வன். சண்முகம் சசிந்தன் | விவசாயம் | 3 |

## போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்கள் விபரம் – 2015.

| இல | மாணவர் பெயர் | போட்டி | மட்டம் | |
|---|---|---|---|---|
| | | | கோட்டம் | வலயம் |
| 01. | செல்வி. சுமணன் சேந்தினி | தமிழ்த்தினம் வாசிப்பு | 2 | - |
| | | சைவநெறி பேச்சு | 2 | - |
| 02. | செல்வி. சதீஸ்குமார் சாம்பவி | தமிழ்த்தினம் - எழுத்தாக்கம் | 3 | - |
| | | விரைவு கணிதம் | 2 | - |
| | | திருக்குறள் மனனம் | 2 | - |
| 03. | செல்வி. ராஜன்கிறிஸ்தோபர் தர்ஷிகா | வணிக கட்டுரை | 1 | 3 |
| 04. | செல்வி. நகுலேஸ்வரன் ருலைக்ஷனா | வணிக கட்டுரை | 3 | - |
| 05. | செல்வி. சுரேஸ்குமார் கர்சினி | சைவநெறி பேச்சு | 2 | 3 |
| 06. | செல்வி. விமல்ராஜ் விதுஷா | சைவநெறி மாலை கட்டுதல் | 1 | 1 |
| 07. | சிவகுமார் சிவறஞ்சினி | சைவநெறி மாலை கட்டுதல் | 3 | - |
| 08. | செல்வி. பொன்னம்பலம் தாட்சாயினி | பண்ணிசை | 3 | - |
| 09. | செல்வி. சதீஸ்குமார் சங்கரி | திருக்குறள் மனனம் | 2 | - |
| 10. | செல்வி. செல்வகுமார் செலக்சனா | சமூக விஞ்ஞானப் போட்டி | 3 | - |
| 11. | சந்திரராசா நிந்துசன் | சமூக விஞ்ஞானப் போட்டி | 2 | - |
| 12. | செல்வி. சிவலிங்கம் ஐஸ்வினி | சமூக விஞ்ஞானப் போட்டி | 2 | - |
| 13. | செல்வி. சத்தியமூர்த்தி சாலினி | சமூக விஞ்ஞானப் போட்டி | 3 | - |
| 14. | செல்வன். இந்திரகுமார் டிசாந் | சமூக விஞ்ஞானப் போட்டி | 3 | - |
| | | தோரணம் பின்னுதல் | 3 | |
| | | புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையால் நடாத்தப்பட்ட சித்திரப்போட்டியில் பங்குபற்றி சான்றிதழ் பெற்றமை | | |

| | | |
|---|---|---|
| 15. | செல்வன். நாகதீசன் அஜய் | புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையால் நடாத்தப்பட்ட சித்திரப்போட்டியில் பங்குபற்றி சான்றிதழ் பெற்றமை |
| 16. | செல்வன். முருகேசபிள்ளை கிருசாந்தன் | புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையால் நடாத்தப்பட்ட சித்திரப்போட்டியில் பங்குபற்றி சான்றிதழ் பெற்றமை |

## அமரர் தம்பு நடேசு ஞாபகார்த்த புலமைப்பரிசில்

**க.பொ.த (சா/த) சிறந்த பெறுபேறு – செல்வன் நாகதீசன் நாகசீலன்**

- சிறந்த மன்றம் - இந்துமாமன்றம்
- சிறந்த செயற்றிறன் உள்ள வகுப்பு - தரம் 08 (2015)
- நூலகப் பாவனைக்கான பரிசு - செல்வன். பாலசுப்பிரமணியம் ஐங்கரன்
- லீவு குறைவாகப் பெற்ற ஆசிரியர் (2015) - திருமதி. வி. புவனேஸ்வரகுமார்
- கண்காட்சிக்கான பரிசு

ஆரம்பப்பிரிவு

1 ஆம் இடம் எரிதல், மின்காந்தம் -குழு<br>
வ.பவிஷாலினி,<br>
கோ. துஷானி,<br>
இ. கிருஷிகா

2 ஆம் இடம் எரிமலை கு. யாபேஸ்

3 ஆம் இடம் வீடு ர. லக்ஸ்மன்

இடைநிலைப் பிரிவு

1 ஆம் இடம் குளிர் சாதனப் பெட்டி - இ. டிசாந்

2 ஆம் இடம் நீர் வகைப்படுத்தல் - பா. ஐங்கரன்

3 ஆம் இடம் நீர் சேகரிப்பு - மு. கிருஷாந்தன்

## பொருள் அன்பளிப்புக்கள்
## (2015.06.24 இல் இருந்து 2015.06.19 வரை)

| | | |
|---|---|---|
| சிறிய அலுமாரிகள் | 02 | திரு.திருமதி கு. யோகேந்திரா (கனடா) |
| மின்விசிறி | 01 | செல்வன் இந்திரகுமார் கவிக்சன் |
| அலுமாரி | 01 | ஹரித்தாஸ் கியூடெக் நிறுவனம் |
| இரும்புக் கத்தி | 01 | திருமதி. நா. சுகிர்தலிங்கம் (ஆசிரியை) |
| Chess Board | 01 | திருமதி. சு. சிவகணேசன் (ஆசிரியை) |
| Principal's Name Board | 01 | திருமதி. அ. நியூட்டன் (ஆசிரியை) |
| கலைக்களஞ்சியப் புத்தகம் | 03 | ஹரித்தாஸ் கியூடெக் நிறுவனம் |
| Lap Top | 01 | அனித்தா (பிரான்ஸ்) |
| பிளாஸ்ரிக் கதிரை | 100 | திரு. திருமதி பேரின்பநாதன் (சுவிஸ்) |
| Radio Panasonic | 01 | செல்வன். சிவலிங்கம் தனுசன் |
| துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் | | திரு. ம. சிவகுமார் (ஜேர்மனி) |
| மலசலகூடம் (ஆசிரியர்களுக்கானது) | | இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் |
| Printer (Colour) | 01 | திரு. S. லோகநாதன் (ஜேர்மனி) |
| நூலக புத்தக இறாக்கை | 01 | செல்வி க.செல்லையா (ஓய்வு பெற்ற ஆசிரியை) |

## 22.06.2015–17.06.2016 வரை நிதிப் பங்களிப்புச் செய்தோர் விபரம்

| அன்பளிப்புச் செய்தவர் பெயர் | தொகை |
|---|---|
| திருமதி.அ.துரைசிங்கம் | 200.00 |
| திரு.க.புஸ்பநாதன் | 1000.00 |
| திருமதி .செ.சூரியகலா | 1000.00 |
| திருமதி .ஈ.அஜந்தா | 4250.00 |
| திரு .செ.நற்குலதாஸ் | 2000.00 |
| செல்வி .க.செல்லையா | 2000.00 |
| திரு .பேரின்பநாதன் ஆதவன் | 100000.00 |
| திரு .செ.ஜெகதீஸ்வரன் | 500.00 |
| திரு .சு.கலைநேசன் | 25000.00 |
| செல்வி.மு.கிருஸ்ணபாமினி | 6000.00 |
| திரு .யூ.கோடீஸ்வரன் | 25000.00 |
| திருமதி. க.சோதிதாசன் | 2000.00 |
| திரு .க.புவீந்திரன் | 5000.00 |
| திருமதி .கு.யோகேந்திரா | 10000.00 |
| திரு .செ.இராசரத்தினம் | 1000.00 |
| திரு .ம.சிவகுமார் | 100000.00 |
| திருமதி .மோ.லோகநாதன் | 30000.00 |
| திருமதி செ.சூரியகலா (விளையாட்டுப்போட்டி) | 5200.00 |
| திருமதி செ.சூரியகலா (நீர்விநியோகம் (300x11 ) | 3300.00 |
| திருமதி.வி.புவனேஸ்வரகுமார் | 5000.00 |
| திருமதி.நா.சுகிர்தலிங்கம் | 5000.00 |
| திரு.ந.தயாசீலன் | 5000.00 |
| திருமதி.ஈ.அஜந்தா (J/62 பெற்றோர் சார்பாக) | 9800.00 |
| திருமதி.அ.சுயந்தினி (J/61 பெற்றோர் சார்பாக) | 10000.00 |
| திரு.து.ரவிச்சந்திரன் | 1000.00 |

# பாடசாலைக் கீதம்

வாழ்க துரையப்பா வித்தியாலயம் -என்றும்
வாழிய வாழியவே
வாழிய வாழியவே

கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழும்
கொழும்புத்துறை தனிலே என்றும்
ஆயகலை அனைத்தும், அழகுற அளிக்கும்
அருளுறை கூடம் வாழியவே.

(வாழ்க)

பசுமையும் வெண்மையும் நீலமும் மஞ்சளும்
சேர் புகழ் கொடி உயர்த்தி - மதி
நுண்மை நிறைந்து அன்பை வளர்த்தே
உண்மை வழி நாம் நடப்போம்.

(வாழ்க)

எண்ணும் எழுத்தும் எழிலுறு கலைகளும்
இனிதுறக் கற்றிடுவோம் - எங்கும்
கண்ணியம் காத்துக் கடமை புரிந்தே
கருத்தோடு அடி எடுப்போம்.

(வாழ்க)

கல்வியிற் சிறந்து கலைகளில் ஓங்கி
காண்பவர் தாம் புகழ்ந்திடவே - என்றும்
பல்லாண்டு நீடு பசுமையாய் இனிதே
பாரினில் விளங்குக வே.

(வாழ்க)

மெகா பதிப்பகம், கச்சேரியடி. 021 221 7939